உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-169

அக்டோபர் 1-15 2023



விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

எள், தர்ப்பை புல், தண்ணீர்

## ஜீவன்கள் தர்ப்பனத்தை எப்படி ஏற்றுக் கொள்ளும்?

e-magazine
aanmeegamalar.com

# திருப்பதியில் பெருமாளுக்கு சூட்டும் மாலையை யாருக்கும் தருவது இல்லை



திருமலை திருப்பதியில் இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வரும் நிகழ்வுகளில் பெருமாளுக்கு சார்த்தப்படும் மாலையை மீண்டும் பயன்படுத்த மாட்டார்கள்.

குறிப்பாக பெருமாள் சன்னதிக்கு உள்ளே சென்ற மாலை வெளியே வருவதில்லை.

திருமலைக்கு மேல் மலையப்பனைத் தவிர வேறு யாரும் மாலை அணியக் கூடாது என்றொரு மரபு உள்ளது.

இதனால் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப்படும் மாலைகள் ஏதும் திரும்ப வெளியே வருவதில்லை. பெருமாளின் கருவறைக்குப் பின்புறத்தின் வாயிலாக அவை வெளியேற்றப் படுகின்றன.

பெருமாளுக்கு சூட்டும் மாலை யாருக்கும் கொடுப்பதில்லை, ஆனால் ஆண்டாள் சூடிய மாலையை மட்டும் பெருமாள் இன்றுவரை ஏற்றுக் கொள்கிறார். aanmeegamalar.com

இந்த மாலைக்கு கோதை தரும் மாலை என்று பெயர்.

புரட்டாசி பிரம்மோற்சவத்தின் போது திரு மலையப்பன் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிக் களைந்த மாலையை அணிந்து கொள்வது ஒரு சிறப்பம்சமாகும்.

ஆன்மிகமலர்

## திருப்பதியில் அணையா விளக்கு



அணையா விளக்குகள் திருமலை யப்பனின் கருவறையில் ஏற்றப்பட்டிருக்கும் எண்ணெய் விளக்குகள் என்றும் அணைவதே இல்லை. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அவை எரிந்துகொண்டே இருக்கின்றன.

# திருமலைக்கு அதிபதி யார்?



சுவாமி புஷ்கரிணிக் கரையில் உள்ள வராகப் பெருமாள் தான் திருமலைக்கு அதிபதியான பெருமாள். அவரிடம் நூறு சதுர அடி நிலம் கடனாகப் பெற்றுக் கொண்டு, ஆனந்த நிலைய விமானத்தின் கீழே கருவறையில் ஸ்ரீநிவாசன் கோயில் கொண்டிருக்கிறார்.

எனவே திருமலைக்குச் செல்லும் பக்தர்கள் முதலில் வராகப் பெருமாளைத் தரிசித்துவிட்டு அதன்பின் மலையப்ப சுவாமியிடம் செல்ல வேண்டும் என்பது மரபு.





# இரண்டு அவதாரத்தில் காட்சி தரும் பெருமாள்

நரசிம்மன், ராமன், கண்ணன் போன்ற தோற்றங் களோடு இறைவன் பூமிக்கு வருவதை விபவ அவதாரநிலை என்று சொல்வார்கள்.

ஸ்ரீரங்கநாதன், வரதராஜன், சாரங்கபாணி போன்ற திருக்கோலங்களில் இறைவன் கோயில்களில் எழுந்தருளி இருப்பதை அர்ச்சாவதார நிலை என்று சொல்வார்கள். ஆனால் திருமலை ஸ்ரீநிவாசன், முதலில் அங்கே அவதாரம் செய்தபோது விபவ அவதாரமாகத் தோன்றி, பத்மாவதியை மணம் புரிந்து, அதன் பின் அர்ச்சாவதார நிலைக்கு மாறிக் கோயில் கொண்டவர்.

விபவம், அர்ச்சை ஆகிய இருநிலைகளும் இணைந்திருப்பது ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கே உண்டான தனிச்சிறப்பு.

ஆன்மிகமலர்

# திருப்பதி மலையையே இறைவனாக வணங்கலாம்!

திருமலைக்கு சென்று இறைவனை தரிசிக்கும் அனைவருக்கும், திருமால் கர்ப்ப கிரகத்தில் மட் டுமே இருக்கிறார் என்று நினைக்க வேண்டாம்.

திருமலையின் ஏழு மலைகளுமே திருமாலின் வடிவமாகப் போற்றப்படுவதால், ஏழுமலைகளை வணங்கினாலே போதும், பெருமாளை தரிசித்த புண்ணியம் தன்னால் வந்து சேரும்.

ராமாநுஜர் திருமலைக்கு வந்த போது, பெருமாள் மலையாக இருப்பதால் மலைமீது ஏற முதலில் மறுத்து விட்டார்.

திருமலையப்பனைத் தரிசிக்க இயலாத வர்கள், அந்த ஏழு மலைகளைத் தரிசித்தா லே அனைத்துப் பாபங்களும் நீங்கி விடும்

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே

– எனும் பாடலில் நம்மாழ்வார் பாடியுள்ளார்.

திருமலையில் மூன்று நாட்கள் விரதம் இருந்த மகான் சில காலம் முன் வாழ்ந்த அன்னயார்ய மகாதேசிகன் என்ற பெரிய வர், திருமலைக்குச் சென்ற போது மூன்று நாட்கள் உணவோ தண்ணீரோ உட்கொள்ளவில்லை.

காரணம் வினவிய போது, உணவோ தண்ணீரோ உட்கொண்டால், இப்புனித மலை யில் சிறுநீரோ மலமோ கழிக்க நேரிடும். அந்தப் பாபத்தை நான் செய்ய மாட்டேன் என விடையளித்தார்.

ஆன்மிகமலர்



e-magazine
aanmeegamalar.com

# 9 வகையான பக்தி

## நீங்கள் எந்த வகை பக்தியை இறைவனிடம் செலுத்துகிறீர்கள்?



e-magazine
aanmeegamalar.com

பகவானிடம் பக்தி கொள்பவர்கள்அனைவரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில்லை.

பக்தி என்பது அவரவர் மனோபாவத்திற்கு ஏற்றதாக அமைகிறது. இப்படி பக்தியை ஒன்பது விதமாக வகைப்படுத்த முடியும்.

| | |
|---|---|
| சிரவணம்: | பகவானுடைய நாமங்களையும், அவனுடைய கல்யாண குணங்களையும் கேட்பது. |
| கீர்த்தனம்: | பகவானின் பெருமைகளைப் பேசுவது. |
| ஸ்மரணம்: | எப்பொழுதும் பகவானை நினைத்துக் கொண்டிருப்பது |
| பாதசேவனம்: | பகவான் கால்களில் விழுந்து வணங்குவது |
| வந்தனம்: | பகவானை வணங்குவது, அவனைப் போற்றுவது |
| அர்ச்சனம்: | பகவானுக்கு மலர், கனி களையும் கொடுத்து மகிழ்வது |
| தாஸ்யம்: | பகவானின் வேலைக்காரனாக நடந்து கொள்வது |
| ஸக்யம்: | பகவானிடம் நட்பு கொள்வது. |
| ஆத்ம நிவேதனம்: | பகவானுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்வது |

மேற்கூறியவை அனைத்தும் ஒன்பது வகை யான பக்திகளாகும், இராமாயணத்தில் இந்த ஒன்பது வகையான பக்திக்கும் சிலரை உதாரண மாகக் கூற முடியும். நாம் கூட இறைவன் மீது பக்தி செலுத்து வோம், ஆனால் நாம் எந்த வகை பக்தியைஇறை வனிடம் செலுத்துகிறோம் என்பது நமக்கே தெரியாது, நமது பக்தி எந்த வகை என்பதை தெரிந்து கொள்ள இராமாயணத்தை படிக்கும் போது கீழ்காணும் ஒன்பது பேரின் பக்தி



செயலை கண்டால் நாம் அந்த பக்தியைதான் இறைவனிடம் செலுத்துகிறோம் என்பதை எளி தாக புரிந்து கொள்ளலாம்.

ஒன்பது வித பக்தியும் அதை பின்பன்றிய ஒன்பது பேரைப் பற்றியும் பார்ப்போம்.

**ச்ரவண பக்தி: அனுமார்**

இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தவர்.

**கீர்த்தன பக்தி: வால்மீகி**

இராமாயணம் இயற்றியவர்.

**ஸ்மரண பக்தி: சீதை**

அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதை இந்த பத்து மாதம் இராமனையே நினைத்திருந்தாள்..

**பாதசேவன பக்தி: பரதன்**

இராமனின் பாதுகையை இராமனாக நினைத்து வணங்கியவன்.

**வந்தன பக்தி: வீபீஷணன்**

இராவணனின் தம்பியானவன், இராமனையே வணங்கி வந்தான்.

**அர்ச்சன பக்தி: சபரி**

இராமனுக்கு நல்ல பழங்களைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பழத்தையும் தானே கடித்துப் பார்த்து அளித்தவள்.

**தாஸ்ய பக்தி: இலட்சுமணன்**

இராமனுடனேயே இருந்து அவரதிசொல்படி நடந்தவன்.

**ஸக்ய பக்தி: சுக்ரீவன்**

இராமனுடன் நட்பு கொண்டவன்.

**ஆத்ம நிவேதனம்: ஜடாயு**

இராவணனிடமிருந்து சீதையைக்காப்பாற்ற முயன்று தன் உயிரைக் கொடுத்தவர்.



e-magazine
aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# விளம்பரத்திற்கும் பெருமைக்கும் செய்யும் தர்ப்பணம் தானம் பலன் தராது



புரட்டாசி, தை, ஆடி இந்த மாதங்களில் வரும் அமாவாசை சிறப்பு வாய்ந்தது என்பது அனை வருக்கும் தெரியும், இந்த மாத அமாவாசையை பெரிய அமாவாசை என்றும் கூறுவார்கள்.

மற்ற மாதங்களில் வரும் அமாவாசையைவிட இந்த மாதங்களில் வரும் அமாவாசையன்று நமது முன்னோருக்கு திதி கொடுப்பதால் மிகுந்த பலன்கள், தோஷங்கள், குடும்ப சச்சரவுகள் விலகும், மேலும் முன்னோருக்கு திதி கொடுப் பதில் ஏதாவது மாதங்களில் சுணக்கம், அல்லது விட்டுப்போயிருந்தால் மேற்கண்ட மாதங் களில் செய்யும் தர்ப்பணத்தின் மூலம் அதை சரி கட்டிவிடலாம் என்பதால் வருடத்தின் இந்த மூன்று அமாவாசை தினங்களில் தர்ப்பணங்கள் செய்யப்படுவது வழக்கம்.

இந்த தர்ப்பணம் செய்பவர்கள் தங்கள் வச திக்கேற்ப தானங்களை செய்யவேண்டும் என்பது சாஸ்திரம், தங்களால் முடிந்ததை தானம் செய்யவேண்டும்.

முடியாதவர்கள், ஒருபசுவிற்கு அகத்தி கீரையையாவது கொடுத்து தானத்தை பூர்த்தி செய்யலாம் என்பார்கள்.

சரி தானம் கொடுக்க வசதி உள்ளவர்கள் சில கடமைகளை கண்ணும் கருத்துமாக செய்தாக வேண்டும். ஏனோ தானோ தானம் என்பது ஒருபலனையும் தராது.

அதைப்போன்று விளம்பரத்திற்கு தானம் செய்வதும், தானம் பெறுபவரை அவமதித்து தானம் செய்வதும் பலனைத் தராது.

இதற்கு எடுத்துக்காட்டாக கூறப்படும் ஒரு சம்பவமும் வரலாற்று நிகழ்வாக பதிவாகியுள்ளது.

ஆபஸ்தம்பரும் தானம் கொடுத்த வள்ளலைப் பற்றிய ஒரு சிறுகதை மூலம் திதி செய்யும்போது தானம் கொடுப்பவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக கூறப்பட்டுள்ளது.

ஒரு சமயம் வேதவிற்பன்னரான பிராமணரான



e-magazine aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

வள்ளல் ஒருவர் ஸ்ராத்தம் செய்தார். ஸ்ரார்த்தம் செய்த பின்பு அன்னதானம் கொடுக்க வேண்டும், அதிகப்படியான உணவுகளை தயாரித்து அன்னதானம் வழங்க தயாரானார், அந்த சமயத்தில் ஒரு பிராமணர் அன்னதானம் பெற வந்தார்.

நல்ல பசியுடன் இருந்தார். அவரை அமர்த்தி இலை போட்டு தானே பரிமாறினார் வள்ளல்.

வந்த பிராமணர் சாதாரண மனிதர்களைக் காட்டிலும் அதிகமாகச் சாப்பிட்டார். பிராமணனுக்கு நல்ல பசிபோலும் என்று எண்ணி இவரும் கேட்கக் கேட்க அன்னத்தை இலையில் போட்டுக்கொண்டே வந்தார்.

தானம் கொடுத்த வள்ளலின் கண்களில் முதலில் இருந்த மரியாதை மறைந்து ஏளனம் குடிகொண்டது. சாப்பாட்டிற்கு வழியில்லாமல் கிடைத்ததும் அதிகமாக சாப்பிடுகிறார் பிராம்மணர் என்று எண்ணினார்.

அதைத் தன் செயல்களிலும் காட்டினார். அதைப் பொருட்படுத்தாத அதிதி 'இன்னும் போடு! 'இன்னும் போடு!' என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒருகட்டத்தில் வந்தவரின் பசிக்கு அன்னம் இல்லாமல் போனது, செய்து வைத்த அனைத்தும் ஒரு நொடியில் காலியாயிற்று!

அபரிதமாக உண்டும் த்ருப்தி யடையாமல் தனக்கு வேண்டுமென்றே தொல்லை கொடுக்க இவர் வந்திருக்கிறார் என்று வள்ளல் நினைத்தார். சமைத்தவை எல்லாம் காலியாகிவிட்டன! 'இன்னும் வேண்டும்! கொண்டு வா!' என்று பிராமணர் கேட்கவே வள்ளலுக்கு கோபம் வந்துவிட்டது.

காலியான சமையல் பாத்திரத்தைக் கொண்டுவந்து பிராமணரின் இலையின் மேல் கவிழ்த்து 'த்ருப்தி ஆயிற்றா!' என்று கேட்டார். (போஜனம் முடிந்தபோது வள்ளல் ப்ராமணர்களை 'த்ருப்தாஸ்தா' என்று கேட்கவேண்டும். திருப்தி யடைந்த பிராமணர்கள் 'த்ருப்யத:' என்று 3 முறை சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் ஸ்ரார்த்தம் கொடுத்தபின் செய்யும் தானம் நல்ல முறையில் பூர்ணமடைந்தது என்று அர்த்தம்) ஆனால் அந்த பிராமணர் 'ந' என்று சொன்னார்! 'ந' என்றால் எனக்கு திருப்தி இல்லை' என்பது இதன் பொருள்.

இதனால் வள்ளலாருக்கு கோபம் தலைக் கேறியது. 'இவர் கேட்கக் கேட்க கொண்டுவந்து கொட்டினேனே! மலை போல உணவுப் பண்டங்களைத் தின்றுவிட்டு திருப்தி இல்லை என்று சொல்லி என்னை அவமானப்படுத்தி நான் செய்த ஸ்ரார்த்த தானத்தை இந்த ப்ராம்மணர் கெடுத்துவிட்டாரே' என்று சினந்தார்.

வள்ளல் நிறைய தானம் செய்து நல்ல தபஸ்வியாக திகழ்ந்தார், கோபத்தால் முகம் சிவந்த அவர் சாபம் கொடுக்க கையில் ஜலத்தை எடுத்து அபிமந்திரித்து பிராமணரின் தலையில் தெளிக்க முற்பட்டார்.

அப்பொழுதுதான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது. வந்த பிராமணர் தன் கை அசைவினால் அபிமந்திரித்து எறிந்த ஜலத்தை அந்தரத்தில் நிறுத்தினார்!

வள்ளல் இதைப் பார்த்து பிரமித்து நின்றார். தான் எறிந்த நீரை அந்தரத்தில் நிறுத்திய அவர் சாதாரண மனிதர் அல்லநு தன்னை விட உயர்ந்தவர் என்பதை அறிந்துநு 'ஐயா! நீங்கள்

யார்? என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு அந்த பிராமணர் பதிலளித்தார். 'நான் ஒரு முனிவன். நான் அதிகம் உண்டதால் என்னை ஏளனம் செய்தாய். உன் பார்வைகளாலும் செயல்களாலும் என்னை அவமதித்தாய்.

சிரார்த்த தானம் பெற வருபவர்களிடம் உன் மூதாதையர்களின் ஒரு அம்சத்தை வைத்து பகவான் அனுப்புகிறான் என்பதை மறந்து நீ நடந்து கொண்டாய். உனக்கு புத்தி புகட்டவே நான் இப்படி நடந்துகொண்டேன். சிரார்த்த தானத்தை பய பக்தியுடன் கோப தாபங்களை விட்டுச் செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்!' என்றார்.



அதற்கு வள்ளல்'ஸ்வாமி! என் தவறை நான்உணர்ந்து கொண்டேன். என்னைமன்னியுங்கள். இனி இம்மாதிரித் தவறுகளைச் செய்யமாட்டேன். நான் செய்த சிரார்த்தம் பூர்ணமாகவில்லையே! அதற்கு என்ன செய்ய வேண்டும்?' என்று வினவினார்.

அதற்கு அந்த பிராம்னர் நான் 'ந' என்று சொல்லி சிரார்த்தம் பூர்ணமாகாமல் இருக்கிறது. இந்த சிரார்த்தம் பூரணமாக புருஷ ஸூக்தம் பாராயணம் செய்! இந்த தோஷம் பரிகாரம் ஆகும்!' என்றார். அதை பாராயணம் செய்து சிரார்த்தத்தை முடித்தார் வள்ளல்.

ஜலத்தை அந்தரத்தில் நிறுத்தியதால் அவரை ஆபஸ்தம்பர் என்று அழைத்தார்கள்.

இந்த நிகழ்விலிருந்து, முன்னோருக்கு சிரார்த்தம் முடிந்து தானம் செய்யும்போது தானம் பெறுபவரை ஏளனமாக பார்க்கக் கூடாது என்பதை மிகத் தெளிவாக கூறுகிறது இந்த நிகழ்வு.

## வாழும் ஜீவன்களிடம் மன்னிப்பு கேட்கும்

# சமண மத சடங்கு



சமண மதத்தில் கடைபிடிக்கும் முக்கிய சடங்குகளில் மிக முக்கியமானதாக கருதப் படுவது "ஜீவன்களிடம் மன்னிப்பு கேட்கும் சடங்கு" இதை "மிச்சாமி துக்கடம்'' என்று கூறப்படுகிறது.

சமண மதத்தின் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாக இருப்பது இந்த மன்னிப்பு கோருதல்.

வருடம் ஒருமுறை எல்லா உயிரினங்களிடமும், தாங்கள் அறிந்தும் அறியாமலும் ஏற்படுத்திய சங்கடங்களுக்கு மன்னிப்பு கோருவதே சம்வத்சரி என்ற நிகழ்வாகும்.

மிச்சாமி துக்கடம் என்று, ஒருவருக்கொருவர் கூறி மன்னிப்பு கேட்கும் அந்த நிகழ்வு ஒவ்வொரு வருடமும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

"நான் ஆழ்மனதிலிருந்து இரு கரம் கூப்பி உங்களிடம் மன்னிப்பு வேண்டுகிறேன்... நான் அறிந்தும் அறியாமலும் உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ ஏதாவது உங்களுக்கு சங்கடம் நேரும்படி செய்திருந்தால் என் ஆழ் மனதில் இருந்து உங்களை மிகத் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன், என்னைமன்னித்து விடுங்கள்".

என்பதுதான் இதற்கான பொருளாகும்.

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து

கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர் மெயில்

புத்தகத்தில் (e-book)

வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

170 க்கும் மேற்பட்ட

இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில்

இலவசமாக

படிக்கலாம்.

# புரட்டாசியும்

## இம்மாதத்தின் சிறப்பும்



- புரட்டாசி சனிக்கிழமை விரத வழிபாடுமிகவும் பழமை வாய்ந்ததும், மகத்துவம் மிகுந்ததும் ஆகும்.
- ஜாதக அமைப்பின்படி சனி, புதன் திசை நடப்பவர்கள் எள்நல்லெண்ணெய்தீபம்போட்டு வழிபட தடைகள் அனைத்தும் நீங்கும். பாவங்கள் நீங்கி புண்ணியமும் சுபயோக சுபங்களும் கூடி வரும்.
- புரட்டாசி மாதத்தில் இறைவனின் திரு விழாக்கள் பல நடக்கும். திருப்பதியில் பிரம் மோற்சவம் நடப்பது போலவே, பல பெருமாள் கோயில்களிலும் வருடாந்திர திருவிழாக்கள் நடை பெறுகின்றன.
- திருப்பதி வெங்கடாசலபதியைக் குலதெய்வ மாகக் கொண்டுள்ள குடும்பங்களில் புரட் டாசி மாதம் மாவிளக்கு ஏற்றி திருவாராதனம் செய்வது வழக்கம்.
- புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனிபகவான் அவதரித்தார். அதன் காரணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது வழக் கத்தில் வந்தது.
- புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளை வழிபட்டால் எல்லாவிதமான கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்வு கிட்டும் என்பது இந்து மதத்தின் மரபு வழி நம்பிக்கை.
- விஷ்ணுவின் அருள்பெற உகந்த மாதமாக புரட்டாசி திகழ்கிறது.
- புரட்டாசி மாதத்தை எமனின் கோரைப்பற்க ளுள் ஒன்றாக அக்னி புராணம் குறிப்பிடு கிறது. எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலக வும் புரட்டாசி மாதத்தில் காத்தல் கடவுளான விஷ்ணுவை வணங்க வேண்டும்.
- புரட்டாசி சனிக்கிழமைகளில் யாருக்கும் கடன் கொடுக்கவும் கூடாது. கடன் வாங்க வும் கூடாது. ஆனால் தர்மம் நிறையச் செய் யலாம்.
- காகத்திற்கு அன்று ஆலை இலையில் எள் ளும் வெல்லமும் கலந்த அன்னம் வைத்தால் சனியின் தாக்கம் நீங்கும்.
- புரட்டாசி சனிக்கிழமையன்று சிவாலயங்க ளுக்குச் சென்று சனி பகவானை வழிபட்டு வணங்கினால், சனி தோஷம் நீங்கும்.
- புனிதமிக்க புரட்டாசி மாதத்தில் வரும்

e-magazine
aanmeegamalar.com



விரதங்கள் புண்ணிய பலன் அதிகம் தரும் என்பது ஐதீகம். ஜேஷ்டா விரதம், மகாலெட்சுமி விரதம், தசாவதார விரதம், கதளி கவுரிவிரதம், அநந்த விரதம், பிரதமை, நவராத்திரி பிரதமை, ஷஷ்டி, லலிதா விரதம் போன்றவை விசேஷமானவை.

◎ புரட்டாசி சனிக்கிழமைகளில் ஏதேனும் ஒரு நாளில் சிலர் திருப்பதிக்குச் சென்று தமது காணிக்கையைச் செலுத்தி வர வேண்டும்.

◎ புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளை வழிபட்டால் எல்லாவிதமான கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்வு கிட்டும் என்பது இந்து மதத்தின் மரபு வழி நம்பிக்கை.

◎ சூரியபகவானின் இச்சா சக்தியாகிய உஷாதேவியிடம் சூரியனுக்கு புத்திரனாக இச்சையின் வடிவமான சனீஸ்வரன் தோன்றி னான் என்பது புராணம். இதனால் புரட்டாசி சனிக்கிழமை வழிபாட்டிற்கு விசேஷமானது.

◎ புரட்டாசிக்கு இருக்கும் முக்கியத்துவம், அது பித்ரு தேவதை வழிபாடு, இறை வழிபாடு, சக்தி வழிபாடு என அனைத்து அம்சங் களையும் அடக்கியிருக்கிறது என்பதே. பித்ருக்களை வழிபடும் மஹாளயம், பெண் களுக்கு மகிழ்ச்சி தரும் நவராத்திரி இவை யும் சேர்ந்து புரட்டாசவடிவமானக பெருமை சேர்க்கிறது.

◎ பெருமாளின் அம்சமாக கருதப்படும் புதனு டைய வீடு கன்னி. இந்த கன்னி ராசியில் சூரியன் அமர்வது புரட்டாசி மாதத்தில்தான். ஆகவே இந்த மாதத்தில் பெருமாளுக்கு வேண்டிய பஜனைகள் பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன. புதனுக்கு நட்பு கிரகம் சனிபகவான். அதனால்தான் புரட்டாசி மாதத்தில் வரக்கூடிய சனிக்கிழமைகள் விஷேசமாக கொண்டாடப்படுகிறது.

◎ புரட்டாசி மாதத் திருவோணம், திருப்பதி மலையப்ப சுவாமி தன்னை வெளிப்படுத்திக் கொண்ட தினம் என்றால், புரட்டாசி சனிக் கிழமையிலோ சனிபகவான் அவதரித்து புரட்டாசிக்கு முக்கியத்துவம் தந்துவிட்டார். அதன் காரணமாக சனிபகவானால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய, காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது மரபாகிவிட்டது. இதற்காகத்தான் புரட்டாசி சனி விரதத்தை பக்தர்கள் வழி வழியாக கடைபிடிக்கின்றனர்.

◎ புரட்டாசி மாதத்தில் ஒருநாள்கூட மனிதன் உபயோகப்படுத்த முடியாமல் அல்லது உபயோகப்படுத்தக்கூடாத நாளாக இருந்து விரதத்திற்காக மட்டும் அமைந்திருக்கிறது.

◎ புரட்டாசி சனிக்கிழமை பெருமாளுக்கு “தளியல்” போடுவது வழக்கம்.முடியாதவர்கள் 1வது,5வது சனிக்கிழமையில் போடுவார்கள். பெருமாள் பாயாசப் பிரியர் என்பதால் பாயாசம் செய்வது முக்கியமானதாகும்.

◎ ஒவ்வொரு மாதமும் அஷ்டமி தினத்தன்று உண்ணா நோன்பு இருந்து சிவபெருமானை வழிபட்டால் எல்லா வளமும் பெற முடியும். புரட்டாசி மாதம் வரும் அஷ்டமிக்கு சம்புகாஷ்டமி என்று பெயர். அன்று தயிர் மட்டும் அருந்தி சிவபூஜை செய்தால் சகல சவுபாக்கியங்களையும் பெற முடியும்.

◎ புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தி திதி யில் சித்தி விநாயக விரதம் இருந்து வழி பட்டால் எதிரிகள் தொல்லை இல்லாமல் போய் விடும்.

◎ புரட்டாசி மாதம் எந்த விரதம் இருந்தாலும் செல்வம், ஆயுள், ஆரோக்கியம் ஆகிய மூன்றும் குறைவின்றி கிடைக்கும்.

◎ புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி தினம் முதல் ஓராண்டுக்கு விநாயகருக்கு அருகம்புல் சார்த்தி அர்ச்சித்து வழிபட்டால் உடல் வலிமை உண்டாகும்.

◎ புரட்டாசி சனிக்கிழமையன்று நாம் பெருமாளை வழிபடும் போது, ‘‘திருவேங்கடமலையில் வாசம் செய்யும் சீனிவாசப் பெருமாளே நமஸ்காரம். அனைத்து மங்கலங்களையும் அளிப்பவரே, வேண்டும் வரங்களை எல்லாம் வழங்குபவரே, மதிப்பிட முடியாத பெரும் புதையல் போன்றவரே நமஸ்காரம். மகா லட்சுமி வசிக்கும் அழகான மார்பை உடையவரே, துதிப்போர் அனைவருக்கும் கற்பக விருட்சம் போல நன்மைகளை பொழி பவரே, சீனிவாசா நமக்கு நமஸ்காரம்ஞ்.’’ என்று மனம் உருக சொல்லி வழிபட வேண் டும். இந்த துதியை சொல்ல, சொல்ல சகல செல்வங்களும் உங்களுக்கு வந்து சேரும்.

◎ புரட்டாசி மாதம் பிறந்த ஆன்மிகப் பெரிய வர்களில் வள்ளலார் குறிப்பிடத்தக்கவர். அவர் கடலூர் மாவட்டம் மருதூரில்

e-magazine
aanmeegamalar.com



ராமைய்யாசின்னம்மை தம்பதிக்கு 1823ம் ஆண்டு புரட்டாசி மாதம் 21ந்தேதி மகனாகப் பிறந்தார்.

◎ சென்னையில் இருந்து திருப்பதிதிருமலைக்கு புனித பாத யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்தப்படி உள்ளது. இந்த ஆண்டு பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் எண்ணிக்கை பல ஆயிரம் உயர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

◎ புரட்டாசி பவுர்ணமி தினத்தன்று அம்பா ளுக்கு 4 வண்ணங்களில் ஆடையும்ரத்தினக்கல் ஆபரணமும் அணிவித்து வழிபட வேண்டும். அன்று அம்பாளுக்கு நைவேத்தியமாக இளநீர் படைக்க வேண்டும். இந்த பூஜையால் குடும்பத்துக்கு தேவையான செல்வங்கள் வந்து சேரும் என்பது ஐதீகம்.

◎ புரட்டாசி சனிக்கிழமை விரதம் இருந்தால் குலதெய்வ அருள் கிடைக்கும்.

◎ புரட்டாசி மாதம் சங்கட ஹர சதுர்த்தி தினத்தன்று விநாயகரை நினைத்து விரதம் கடைபிடித்தால் சுகபோக வாழ்வு கிடைக்கும்.

◎ கடவுளுக்கு காணிக்கை மற்றும் நேர்த்திக் கடன்கள் செலுத்த புரட்டாசி மாதமே சிறந்த மாதமாகக் கருதப்படுகிறது.

◎ ஸ்ரீரங்கம் திருத்தலத்தில் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதர் கோயிலில் ஸ்ரீரங்க நாச்சியார் தாயார் சன்னதியில் நவராத்திரி விழா நடைபெறும்.

◎ தென்மேற்கு திசை கன்னி மூலை என்று கூறப்படுவதால் கோயிலில் இந்தக் கன்னி மூலையில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் மிகவும் போற்றப்படுகிறார். புரட்டாசி மாதம் ராசிச் சக்கரத்தின் கன்னி மூலையில் அமைந்திருப்பதால் இம்மாதத்தில் செய்யப்படும் விநாயகர் வழிபாடு கூடுதல் பலன்களைத் தரும்.

◎ புரட்டாசி மாதத்தில் சுக்கிலபட்ச சதுர்த்தி சியில் சிவாலயங்களில் ஸ்ரீநடராஜர் பெருமானுக்கு அபிஷேகங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவதைக் தரிசிக்கலாம். மேலும் புரட்டாசி மாத சுக்லபட்ச திரிதியை பலராமர் அவதார தினமாகவும், சுக்லபட்ச துவாதசி அன்று வாமன ஜெயந்தி தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

◎ புரட்டாசி மாதம் பவுர்ணமி தினத்தன்று லட்சுமியை இந்திரன் வணங்குவதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று வலம்புரி சங்கில் பசும்பால் ஊற்றி மலர்களால், அலங்கரித்து வழிபட்டால் சகல செல்வங்களும் வந்து சேரும்.

◎ புரட்டாசி மாதம் வெள்ளிக்கிழமை திருப்பரங்குன்றம் முருகப்பெருமானின் கையில் இருந்து வேல் எடுத்து கங்கைக்கு எடுத்து செல்லும் விழா நடந்து வருகிறது.

◎ புரட்டாசி மாதம் அதிக வழிபாடுகள் நடத்த வேண்டிய மாதமாகும். புரட்டாசியில் வீடு கட்டும் பணியை தொடங்கினால் உடல் நலம் பாதிக்கும் என்று வாஸ்து குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

◎ புரட்டாசி மாத அமாவாசை தினத்தன்று பிறந்தவர்கள் ஆராய்ச்சிகள் செய்வதில் ஆர்வம் மிக்கவர்களாக இருப்பார்கள்.

◎ புரட்டாசி மாதம் சனிக்கிழமை மட்டுமின்றி திங்கள், புதன்கிழமையும் பெருமாள் வழிபாட்டுக்கு உகந்த நாட்களாகும். அன்றைய வழிபாடுகள் மகாலட்சுமியை மகிழ்ச்சி அடையச் செய்யும்.

◎ கல்வித் தடை, திருமணத் தடை, நோய், பணப் பிரச்சினை உள்ளவர்கள் புரட்டாசி திருவோணம் தினத்தன்று பெருமாளை வழிபட்டால் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும்.

e-magazine
aanmeegamalar.com

# காசியில் தரிசிக்க வேண்டிய தீர்த்த கட்டங்கள்



ஆன்மிக பூமி காசியின் 6 புனிதமும் வரலாறும்


நீண்ட காலத்திற்கு முன்பு பிருகு குடும்பத்தைச் சேர்ந்த வேதசிர என்ற முனிவர் ஒருவர் இருந்தார். ஒருமுறை அவர் தீவிரமான பிரார்த்தனைகளில் மூழகியிருந்தபோது, அவருக்கு முன்னால் சுசி என்ற அழகிய அப்சரா (வானத்துப் பெண்) ஒருவர் சென்றார். அவளைப் பார்த்தவுடன், முனிவர் தனது உணர்ச்சிகளின் மீதான கட்டுப்பாட்டை இழந்தார். மேலும் அவரது உடலில் உடல் எதிர்வினைகள் ஏற்படத் தொடங்கின.

அபசரா, சுசி, முனிவர் தன்னை சபிப்பார் என்று மிகவும் பயந்தாள். அவள் குற்றமற்றவள் என்று கெஞ்சினாள், தன்னை மன்னிக்கும்படி முனிவரிடம் கேட்டாள். முனிவர், நீண்ட யோசனைக்குப் பிறகு சுசியிடம் தெரிந்தோ தெரியாமலோ முனிவரின் உள்ளார்ந்த உணர்ச்சிகளை வளர்த்துவிட்டதாகவும், அதை தர்க்கரீதியான முடிவுகளுக்கு அவள் பின்பற்ற வேண்டும் என்றும் கூறினார். முனிவர் சர்வ வல்லமை படைத்தவர். அப்சராவுடன் எந்த உடல் தொடர்பிலும் ஈடுபடாமல், அவளைத் தன் குழந்தையைக் கருத்தரிக்கச் செய்தார்.

காலப்போக்கில் அவளுக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. சீக்கிரமே முனிவரின் ஆசிரமத்திற்கு வந்த சுசி. குழந்தையை அங்கேயே விட்டுவிட்டு தன் இருப்பிடம் திரும்பினாள். முனிவர் தம்முடைய பெண் குழந்தையைப் பார்த்து மகிழ்ந்தார். அவருக்கு தூத்பாபா என்று பெயரிட்டார். முனிவர் அந்தப் பெண்ணை மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் வளர்த்தார்.

தூத்பாபாவுக்கு எட்டு வயதை எட்டியதும்,

**காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.**



முனிவர் தனது திருமணத்திற்கு பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடிக்க சிறிது கவலைப்படத் தொடங்கினார். அவர் தூதபாபாவுடன் இது பற்றி வெளிப்படையாக விவாதித்தார்.தூத்பாபா, தனது விருப்பப்படி ஒரு நபரை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக பதிலளித்தாள். தான் விரும்பும் நபர் மிகவும் மதிக்கப்படுவார் என்றும், அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அனைத்து குணநலன்களையும் கொண்டிருப்பார் என்றும், அவளை சரியான முறையில் கவனித்துக்கொள்வார் என்றும் அவள் கூறினாள்.

அதற்கு ஒப்புக்கொண்ட முனிவர். சிறுமியின் விருப்பங்களை நிறைவேற்ற, அவள் தீவிர பிரார்த்தனைகளை மேற்கொண்டு இறைவனை வணங்க வேண்டும் என்று கூறினார். தூத்பாபா இதற்குச் சம்மதித்து, பல நாட்கள் உணவின்றி தனது தீவிர பிரார்த்தனையைத் தொடங்கினாள். கடுமையான தாகத்தின் சமயங்களில் அவள் ஒரு துளி தண்ணீரைக் குடித்தாள் கடுமையான குளிர்காலத்திலும் கூட அவள் பிரார்த்தனையைத் தொடர்ந்தாள். (காசி காண்டம், அத்தியாயம் 59 அவளது பிரார்த்தனைகளின் தீவிரத்தை விரிவாக விவரிக்கிறது).

இறுதியாக பிரம்மா அவள் முன் தோன்றி அவளுக்கு எல்லா மகிழ்ச்சியையும் அருளினார். அவள் மிகவும் தூய்மையானவள் என்றும், உலகில் உள்ள மூன்றரை கோடி புனித நீரும் அவளது உடலின் முடிகளின் வேரில் தங்கி யிருக்கும் என்றும் கூறினார். உலகில் உள்ள அனைத்து தீர்த்தங்களையும் விட தூதபாபா தூய்மையானதாகவும், மிகவும் புனிதமானதாகவும் போற்றப்படுவார் என்று பிரம்மா மேலும் கூறினார்.

தன் பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டு தூத்பாபா முனிவரின ஆசிரமத்திற்குத் திரும்பினாள். ஒரு நாள் அவள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது, அவளின் அழகில் மயங்கி, அவளிடம் வந்த தரம் ராஜ, அவளிடம் முன்மொழிந்தான். தூத்பாபா தன் தந்தையிடம் பேச வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆனால் தரம ராஜுக்கு வேறு எண்ணம் இருந்தது. சில நேரம் சூடான விவாதங்கள் நடந்தன, அவள் ஒரு சிலையாக மாறுமாறு தரம் ராஜ அவளை சபித்தார். தரம் ராஜ். 'தர்ம நத" என்ற ஆண நதியாக மாறுவார் என்று தூத்பாபா சபித்தாள்.

தூத்பாபா துறவற இல்லத்தின் உள்ளே சென்று நடந்ததை தந்தையிடம் கூறினார். முனிவர், தனது தெய்வீக சக்திகளைக் கொண்டு, என்ன நடந்தது என்று அறிந்து, அவளை ஒரு கல் சிலைக்கு பதிலாக ஒரு உலோக சிலையாக மாற்ற செய்தார். காலப்போக்கில, உலோக சிலை உருகி ஒரு நதியை உருவாக்கும். மேலும், தரம் ராஜுக்கு கணவனாக இருக்கும் அனைத்து குணங்களும் இருப்பதாகவும், தூத்பாபா நதியாக மாறியவுடன், அவள் தரம நதத்தில் சேருவார் என்றும் அவர் கூறினார்.




தூத்பாபாவின் சிலை விரைவில் உருகி, அதே பெயரில் நதியாக மாறியது. அவள் பிரம்மாவின் ஆசி பெற்றதால், தூத்பாபா மிகவும் புனிதமானாள். தூத்பாபா நதி தர்ம நத நதியுடன் இணைந்த இடத்தில், மயூக் ஆதித்யாவின் வடிவில் சூரிய பகவான தீவிர பிரார்த்தனையில் ஈடுபட்டார். பிரார்த்தனையின் தீவிரம் காரணமாக, அவரது கிரண (சூரியக் கதிர்கள்) மிகவும் வெப்பமாகவும் தாங்க முடியாததாகவும் மாறியது. விரைவிலேயே, வெப்பத்தால் உருவான வியர்வை, கிரணா நதி என்று அழைக்கப்படும் நதியின் வடிவில் ஓடத் தொடங்கியது.

கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் இணைந்த புனிதமான இடத்தில், கிரணா நதி தூத்பாபா நதியுடன் இணைந்தது. எனவே, இந்த ஐந்து புனித நதிகள். தூத்பாபா, கிரணா, கங்கை, யமுனா மற்றும் சரஸ்வதி ஆகியோர்



e-magazine
aanmeegamalar.com



ஒன்றிணைந்து பஞ்சந்த தீர்த்தம் என்றும் பின்னர் பஞ்ச கங்கை என்றும் பெயர் பெற்றனர்.

பஞ்ச கங்கையில் குளிப்பது மிகவும் புண்ணியமாக கருதப்படுகிறது. பஞ்ச கங்கையில் ஒருமுறை மட்டும் குளிப்பது, பிரயாகில் (அலகாபாத்) ஒரு முழு மாக மாதம் நீராடுவதற்குச் சமமாகக் கருதப்படுகிறது.

பஞ்ச கங்கையில் நீராடி, தன் முன்னோர்களுக்கு சிரார்த்த சுரமா செய்யும் ஒரு பக்தன் அவர்களுக்குப் பெரும் சேவை செய்து, தன் வாழ்வில் மோட்சத்தை அடைவான். அவன் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்கள் அனைத்தும் கழுவப்படும்.

பஞ்ச கங்கையில் சிராத்தம் செய்யும் போது எவ்வளவு கருப்பு எள் விதைகள் கங்கை நதியில் விழுகின்றதோ, அதனை ஆயிரம் ஆண்டுகள் பக்தரின் முன்னோர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

அதாவது பிண்ட தானத்தில் 50 எள் விதைகள் ஆற்றில் விழுந்தால் முன்னோர்கள் 50 ஆயிரம் வருடங்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

ராஜ சூய யாகம் அல்லது அஸவ மேத யாகம் போன்ற பெரிய யாகங்களைச் செய்வதால் ஒரு பக்தருக்கு என்ன பலன் கிடைத்தாலும், அந்த பக்தர் பஞ்ச கங்கையில் ஒரு புனித நீராடுவதன் மூலம் பல மடங்கு பலனைப் பெறுவார்.

பஞ்ச கங்கையில் நீராடுவதால் ஏற்படும் நல்ல பலன்களை காசி காண்டம் விரிவாக விவரித்துள்ளது. கார்த்திக் மாதத்தில் (அக்டோபர் 23 நவம்பர் 20 தோராயமாக), ஒருவர் பஞ்ச கங்கையில் ஸ்நானம் செய்தால், அவர் பல வருடங்கள் பிற இடங்களில் அல்லது யுகங்களில் தபஸ் செய்வதால் ஏற்படும் பலன்களைப் பெறுவார்.

முழு கார்த்திகை மாதத்திலும், பக்தியுள்ள இந்துக்கள் ஒரு கூடையில் வைக்கப்பட்டு மூங்கில கம்புகளின் மீது அதிக உயரத்தில் விளக்குகளை ஏற்றி வைப்பார்கள். இது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படும் சடங்கு.

விடியற்காலையின் போது, புனித நீராட வரும் பக்தர்கள் நதிக்கரையில் புள்ளியிடப்பட்ட விளக்குகளின் வரிசையை இடைநிறுத்தப் பட்ட கூடைகளின் துளைகள் வழியாக சல்லடைப் பதைக் காணலாம், இது ஒரு கண்கொள்ளா காட்சியை அளிக்கிறது.

பஞ்ச கங்கையில் குளிப்பதற்கு கார்த்திக் பூர்ணிமா மிகவும் உகந்த நாள். உண்மையில் கார்த்திக் மாதம் முழுவதும் சூரிய உதயத்திற்கு முன் அல்லது சூரிய உதயத்தின் போது பஞ்ச கங்கையில் குளிப்பதற்கு மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்.

இந்த நேரத்தில் தேவர்களும் தெய்வங்களும் கூட பஞ்ச கங்கைக்கு வந்து நீராடுவதாக நம்பப்படுகிறது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# தர்ப்பனத்திற்கு எள் தர்ப்பை புல் ஏன் பயன்படுத்துகின்றனர்

# உயிர் அற்ற ஜீவன் இவற்றை எப்படி ஏற்றுக் கொள்ளும்?





எள் என்பது திருமாலின் வியர்வையிலிருந்து தோன்றியதாக கருதப்படுவதினால் அந்தத் தானியம் மிகவும் பரிசுத்தமானதாகும். எள்ளிலும் கருப்பு எள், வெள்ளை எள் இரண்டு வகை உண்டு. எந்த எள்ளை பயன்படுத்தினாலும் பலன் ஒன்றே என்றாலும் சிரார்த்த காலத்தில் கருப்பு எள்ளைச் சேர்த்தால் அது பிதுர் தேவர்களை அதிக சந்தோஷப்படுத்தும் என்பார்கள். கருப்பு எள் வராஹ மூர்த்தியிடம் இருந்து தோன்றியதாக கூறுவார்கள். அதனால்தான் எள்ளை தண்ணீருடன் கலந்து சமர்பிக்கையில், பித்ருக்களின் பசியைப் போக்கி திருமால் வாழும் இடமான வைகுண்டலோகத்துக்கு இறந்தவர்களது ஆத்மாக்களை அனுப்பி வைப்பதாக ஐதீகம் உள்ளது என்று பண்டிதர்கள் கூறுவார்கள்.

அதைப் போன்ற தெய்வீக மகிமை பெற்றதே தர்பைப் புல்லும் ஆகும். தர்ப்பைப் புல் என்பது முதலில் ஆகாயத்தில் தோன்றியது என்றும் அந்த தர்பைப் புல்லின் அடிப் பகுதியில் பிரஹ்மாவும், நடுப்பகுதியில் திருமாலும் நுனியில் சிவபெருமானும் வசிப்பதாகவும் அதுவே பரப்பிரும்மனின் வடிவம் என்றும் புராண ஐதீகம் உண்டு. இதனால் தர்பை உள்ள இடத்தில் இருந்து தீய சக்திகள் ஓடி விடும். இறந்தவரது உடலில் இருந்து வெளியேறிய ஆத்மாவை தீய சக்திகள் அணுக முடியாமல் இருக்க தர்பை மீது சவத்தை வைப்பார்கள் என்பது இதனாலும் வைக்கப்பட்டு உள்ள விதி முறை ஆகும். தர்பையில் காந்த சக்தி என்பதினால் அது அதை கையில் வைத்துள்ளவர்களுக்கு பிராண சக்தியைத் தருகிறது. அதனால்தான் நாம்



e-magazine aanmeegamalar.com



சடங்குகள் செய்யும்போது இழக்கும் பிராண சக்தியை அதிகரிக்கவும் அதை பயன் படுத்துகிறோம். தர்பையின் மேன்மையை குறித்து மாபெரும் முனிவர்களான மார்க்கண்டேயர், அத்ரி, கௌ சிகர், வியாசர், பரத் வாஜர், யாக்ஞவல்க்யர், ஆபஸ்தம்பர் போன்றவர்கள் நிறையவே கூறி உள்ளார்கள்.

வேதங்களிலும் தர்பை யின் மகிமையைக் கூறி உள்ளார்கள். அந்த முனி வர்கள் தர்பைப் புல்லை சமுஸ்கிருத மொழியில் குசம் என்று குறிப்பிட்டு உள்ளார்கள்.

ஜீவனுக்கு சரீரமே இல்லை எனும்போது அவை எப்படி பிண்டத்தை உண்டு தர்பை மூலம் தரப்படும் எள்ளும் தண்ணீரையும் குடிக்க முடியும் என்ற சந்தேகம் எழலாம்.

இந்த பிரபஞ்சத்தில் ஒவ்வொரு இயக்கத்திற்கும் ஜீவ அணுக்கள் உண்டு. காற்றில் உள்ள அதன் ஜீவ அணுக்கள் நம்மை உரசிக் கொண்டு செல் லும்போது அந்த உணர்வை காற்று என்று உணர முடியும். ஏன் என்றால் அந்த ஜீவ அணு வின் தன்மை அது.

அதைப் போலத்தான் ஒலி, வாசனை, ஒளி, பார்வை என ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஜீவ அணு உள்ளது. அதன் மூலமே நம்மால் அவற் றின் தன்மைகளை உணர முடிகிறது.

இப்படியாக உள்ள நிலையில் பிரேத ஆத்மா வாக உள்ள ஜீவன் பிண்டத்தை உண்டு தர்பை மூலம் தரப்படும் எள்ளும் தண்ணீரையும் எப்படி குடிக்க முடியும் என்ற கேள்வி எழத் தேவையே இல்லை.

மனித உடலுக்குள் உடல் சார்ந்த (Physi- cal) உணவு புகுந்து சென்று வயிற்றில் அமர்ந் ததும்தான் பசி அடங்கும், தண்ணீர் தாகத்தை அடக்கும். ஆனால் பிரேத உடலுக்கு பசியை அடக்கவும், தாகத்தைத் தீர்க்கவும் உடல் சார்ந்த பொருள் தேவை இல்லை. அவற்றால் உடல் சார்ந்த பொருளை உண்ணவோ குடிக் கவோ முடியாது.

ஆனால் அதே சமயத்தில் அந்த உடல் சார்ந்த பொருட்களான பிண்டம் மற்றும் எள்ளும் தண் ணீரும் வெளிப்படுத்தும், நமது கண்களுக்கு தெரியாத ஜீவ அணுக்களை அவை ஸ்வாசித்து அவற்றை தன்னுள் கிரகித்துக் கொள்ளும் நிலையில் பிரேத உடலின் உணர்வுகள் அமைந்து உள்ளன.

மனித உடலுக்கு உடல் சார்ந்த பொருள் தேவை என்பதை போல பிரேத உடலுக்கு உடல் சார்ந்த பொருட்களின் ஜீவ அணுக்களின் ஸ்பரிசம் மட்டுமே தேவை என்பதினால்தான் ஜீவன்களினால் தர்பை மூலம் தரப்படும் எள்ளும் தண்ணீரையும் குடிக்க முடியும்.

இந்த பதத்தை இன்னும் விரிவாகவும் எளிதாக வும் புரிந்து கொள்ள வேண்டுமென்றால்,

மின்சாரம் பயன்பாட்டின்போது கண்ணுக்கு தெரிவது ஒயர் மட்டுமே, ஆனால் அந்த ஒயரி லிருந்து வரும் மின்சாரம் கண்ணுக்கு தெரியாது, அந்த ஒயரை தொட்டால், மின்சாரம் நம்மை செயல் இழக்க செய்யும். இதுதான் ஸ்பரிசம் என்பது.

அதைப்போன்று மின்விசிறியை அனை வரும் பார்த்திருப்போம், ஆனால் அந்த மின்விசிறி மூலம் பெறப்படும் காற்றை யாராவது பார்த் திருப்போமா?

கண்ணுக்கு தெரிந்த ஒயரின் மூலம், கண் ணுக்கு தெரியாத மின்சாரத்தை பயன்படுத்தி, கண்ணுக்கு தெரிந்த மின்விசிரி மூலம் கண்ணுக்குத் தெரியாத காற்றின் ஸ்பரிசத்தை உடல் அனுபவிக்கிறதே இதை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

கண்ணுக்கு தெரிந்த எள், தண்ணீரின் ஸ்பரிச மும், கண்ணுக்கு தெரிந்த தர்ப்பைப் புல்லின் ஸ்பரிசத்தை மட்டுமே கண்ணுக்கு தெரியாத ஜீவன்கள் பெற்றுக் கொள்ளும்.

e-magazine
aanmeegamalar.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
## சந்தா

## UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# மகாளய அமாவாசை தினத்தில் செய்யும் தானத்தின் பலன்கள்



மகாளய அமாவாசை நாளில் செய்யும் சிறு தானமும் நமது முன்னோர்களின் பசியை தீர்த்து அவர்களின் ஆசியை வழங்கக்கூடியது. இத்தகைய சிறப்பு மிக்க அமாவாசை திருநாளில் தானங்கள் செய்வோம். நமது கர்மவினைகளை தூள் தூளாக்குவோம்.

எந்தெந்த பொருட்களை தானம் செய்தால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்ற விபரம் வருமாறு:

| | |
|---|---|
| அன்னம்: | வறுமையும், கடனும் நீங்கும் |
| துணி: | ஆயுள் அதிகமாகும் |
| தேன்: | புத்திர பாக்கியம் உண்டாகும் |
| தீபம்: | கண்பார்வை தெளிவாகும் |
| அரிசி: | பாவங்களை போக்கும் |
| நெய்: | நோய்களை போக்கும் |
| பால்: | துக்கம் நீங்கும் |
| தயிர்: | இந்திரிய சுகம் பெருகும் |
| பழங்கள்: | புத்தியும், சித்தியும் உண்டாகும் |
| தங்கம்: | குடும்ப தோஷங்களை நீக்கும் |
| வெள்ளி: | மனக்கவலை நீங்கும் |
| பசு: | ரிஷி, தேவர், பிதுர் கடன்கள் அகலும் |
| தேங்காய்: | நினைத்த காரியம் வெற்றியாகும் |
| நெல்லிக்கனி: | ஞானம் உண்டாகும் |
| பூமி தானம்: | ஈஸ்வர தரிசனம் உண்டாகும் |

சிலருக்கு பொருள் வசதி குறைவாக இருக்கும். அவர்களால் பெரிய அளவில் தானம் செய்ய இயலாது. அவர்கள் கவலை கொள்ள வேண்டாம்.

பசுவிற்கு உணவளிப்பதன் மூலம் தானத்துக்குரிய எல்லா பலன்களையும் பெற முடியும். கன்றுடன் கூடிய பசுவிற்கு தானம் அளித்தல் மிகவும் நல்லது. பசுவிற்கு ஒரு கட்டு அருகம்புல் அளிக்கலாம். ஒரு கட்டு அகத்தி கீரையை உணவாக அளிக்கலாம். பசுவிற்கு வாழையிலையில் சாதத்தை அளிக்கலாம். பழவகைகளை கொடுக்கலாம்.

பழங்களில் வாழைப்பழமே மிகச் சிறந்தது. ஆறு மஞ்சள் வாழைப்பழங்களை பசுவிற்கு உணவாக அளிக்கலாம். அரிசியும், வெல்லமும் கலந்து ஒரு பாத்திரத்தில் பசுவிற்கு உணவாக அளிக்கலாம். இதை அதிகமாக தரக்கூடாது. பசுவிற்கு வயிற்று உபாதையை உண்டாக்கும்.

கோமாதா என்றழைக்கப்படும் பசுவின் உடலில் அனைத்து தெய்வங்களும், தேவதைகளும் வாசம் செய்கின்றனர். அனைத்து தெய்வங்களுக்கும் மற்றும் தேவதைகளுக்கும் ஒரே நேரத்தில் தானம் செய்ய முடியுமா? முடியும். பசுவுக்கு உணவளித்தால் அனைத்து தெய்வங்களுக்கும், தேவதைகளுக்கும் உணவளித்ததாகவே சமம். எனவே இத்தகைய சிறப்புடைய பசுவிற்க்கு தங்களால் இயன்ற அளவு உணவை அளிக்கவும்.

அமாவாசை நாளில் பசுவிற்கு உணவளித்தால் நமது கர்ம வினைகளை போக்கிக் கொள்ள முடியும். அமாவாசை நாளில் பசுவிற்கு உணவளித்தல் நம் பிதுர்களையும் மகிழ்விக்கும் செயல் ஆகும். நம் பிதுர்களும் மகிழ்ச்சி அடைந்து அவர்களின் ஆசிகளும் கிட்டும்.




e-magazine
aanmeegamalar.com



மாதம் தோறும் 2 புத்தகங்கள்
மலர்-3 இதழ்-68 ஜூன் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com
e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
ஆன்மிகமலர்
மெயில் புக்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!
மாதமிருமுறை
உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்
ஆன்மிகமலர் mobile app
சிவ அதிர்வை தரும் வில்வ இலை பூஜை
சனிதோஷம், தீயசக்திகளை விரட்டும் மூத்ததேவி வழிபாடு
மழை வேண்டி இறைவனிடம் கூட்டு பிரார்த்தனை செய்யுங்கள்
முதல்வர் அறிவிப்பு: சென்னையில் கொட்டிய மழை
e-magazine வடிவில்
படியுங்கள் இலவசமாக
aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஜைனர்களின் தமிழ் தொண்டு




e-magazine
aanmeegamalar.com

இந்தியாவில் ஜைனமதம் புத்த மதம் தோன்றுவதற்கு பலநூறு ஆண்டு களுக்கு முன்பே தோன்றியது ஆகும் அம்மதத்தை வளர்ப்பதற்கும் வளப் படுத்துவதற்கும் அவ்வப்போது தீர்தங்கர்கள் என்ற மகான்கள் தோன்றினார்கள் என்பது உலகறிந்த செய்தியாகும். அப்படி வந்த மகான்களில் வர்த்தமான மகாவீரர் கடேசியாக வந்த தீர்தங்கர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. மகாவீரர் காலத்திலேயே ஜைன மதம் வட இந்தியா முழுவதும் ஓரளவு பரவியது.




பின்னர் சக்ரவர்த்தி சந்திரகுப்தர் காலத்தில் வடக்கு பகுதியில் மிக கடுமையான வறட்சியும் பஞ்சமும் ஏற்படவே எராளமான ஜைனர்கள் சந்திரகுப்தர் குருவாகிய பத்திரபாகு என்பவருடன் தெற்கு நோக்கி பயணப்பட்டு மைசூர் அருகில் உள்ள சிரவண பெலகுளா என்னும் ஊரில் தங்கினார்கள். அங்கிருந்த வண்ணமே தக்காணம் முழுவதும் ஜைன மதத்தை ஆத்ம பூர்வமான ஈடுபாட்டோடு பரப்பினார்கள்.

தக்காணத்தில் கங்கர், கதம்பர், சாளுக்கியர், ராஸ்டிரகூடர் ஆகிய அரசர்களின் வம்சத்தார்கள் ஜைன மதத்திற்கு நல்ல வரவேற்ப்பை கொடுத்தார்கள். சாளுக்கியர்களுக்கும் தமிழ்நாட்டினருக்கும் இருந்த தொடர்பினால் ஜைன மதம் தமிழகத்தை நோக்கி நகர்ந்து வந்தது சுமார் ஏழாம் நூற்றன் வரையில் தமிழகத்தில் ஜைன மதம் முழு செல்வாக்கை பெற்று புகழோடு திகழ்ந்தது. பாண்டியர், சேரர், சோழர், பல்லவர் ஆகிய தமிழ் மன்னர்கள் வைஷ்ணவம், சைவம் ஆகிய வைதீக மதங்களில் மீது மிக தீவிரமான ஈடுபாடு



கொண்டவர்களான இருந்தாலும் கூட ஜைன மதத்திற்கு மிக சிறப்பான வரவேற்ப்பையும் பாதுகாப்பையும் கொடுத்தார்கள்.

சைவ சமயம் தமிழகத்தில் மீண்டும் தலையெடுத்து தனியாட்சி நடத்த துவங்கிய போது தமிழகத்தில் ஜைனர்களின் எண்ணிக் கை கணிசமாக குறைய ஆரம்பித்தது ஆனாலும் ஜைனர்களின் கொல்லாமை புலால் உண் ணாமை ஆகிய அகிம்சை நெறிமுறைகள் தமிழ் மக்களின் நெஞ்சோடும் வாழ்க்கை முறை யோடும் மிக ஆழமாக பதிந்து விட்டது.

ஜைனர்கள் தமிழுக்கும் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஆற்றியுள்ள தொண்டு மிக அதிகமாகும். தமிழர்கள் தங்களது இலக்கிய இலக்கண நூல்களில் வட மொழி சொற்கள் அதிகமாக இல்லாமல் தனி தமிழ் சொற்களே மிகுதியாக இருக்கும்வண்ணம் கையாண்டு வந்தனர். வட மொழி சொற்களை பயன்படுத்தியே ஆக வேண்டிய இடங்களில் கூட பல புதிய தமிழ் சொற்களை உருவாக்கி பயன்படுத்தி கொண்டார்கள்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

தமிழில் தனி தமிழ் சொற்கள் உருவாக்கம் பெறுவதற்கு ஜைனர்களின் அறிவு பூர்வமான பங்கு பணிகள் மிக அதிகம் என்றே துணிந்து சொல்லலாம்.

தமிழ்நாட்டில் இருந்த ஜைனர்கள் தமிழ் மொழியில் பல நூல்களை உருவாக்கியது போலவே வட மொழியிலும் நூல்களை உருவாக்கினார்கள் நம் தமிழ் மொழியில் உள்ள நேமிநாதம் நன்னூல், அகப்பொருள் விளக்கம் போன்ற இலக்கண நூல்களையும் யாப்பெருங்கலகாரிகை, யாப்பெருங்கலவிருத்தி ஆகிய யாப்பிலக்கண நூல்களையும் திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு போன்ற அகராதி நூல்களையும் நாலடியார் அறநெறி சாரம் பழமொழி ஏலாதி ஆகிய நீதி நூல்களையும் சீவகசிந்தாமணி, வளையாபதி ஆகிய காப்பியங்களையும் யசோதர காவியம் சூடாமணி நீலகேசி ஆகிய சிறுபஞ்ச காவியங்களையும் படைத்திருகிறார்கள் இவற்றில் நீலகேசி என்பது தனித்துவமான தத்துவ நூலென்று அறிஞர்களால் போற்றபடுகிறது.

ஜைன மதத்தை உருவாக்கிய வர்த்தமான மகாவீரர் தனது போதனைகள் மாளிகையில் உள்ள சீமான்களுக்கானது அல்ல குடிசைகளிலும் சாலை ஓரங்களிலும் குடியிருக்கும் சாமான்ய பொதுமக்களுக்கானது என்பதில் மிக உறுதியாக இருந்தார். அதையொட்டியே அவரும் அவருடைய சீடர்களும் அக்காலத்திய பொது ஜனங்கள் வெகுவாக பயன்படுத்திய அர்த்த மாகதி பிராகிருத மொழிகளிலேயே தங்களது உபதேசங்களை செய்து வந்தார்கள் இதனால் ஆதிகால ஜைன நூல்கள் அனைத்துமே பிராகிருத மொழிகளிலேயே இருந்தது.

ஏசுநாதர் பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தான் ஜைன மத உபதேசங்கள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. அவற்றில் கி.பி. முதலாம் நூற்றாண்டு உமா சுவாமி என்பவரால் எழுதப்பட்ட

e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

தத்துவார்த்த சூத்திரம் என்ற நூல் மிகவும் புகழ்வாய்ந்தது ஆகும்.

இந்த நூலுக்கு பல அறிஞர்கள் விளக்க உரை தந்திருந்தாலும் சமந்த பந்திரர் என்ற அறிஞர் தந்த கந்த ஹஸ்தி என்ற மகபாஷ்யமே மிக சிறந்த நூலாகும். அந்த நூலில் உள்ள ஒரு சில ஸ்லோகங்கள் மட்டுமே இப்போது கிடைக்கிறது. இந்த நூலுக்கு தேவனந்தி, பூஜ்யபாதர், அகலந்தர், வித்யானந்தர் போன்ற அறிஞர்களும் விளக்க உரை எழுதியிருக்கிறார்கள்.

ஜைன மதத்திற்கு என்றே தனி புராண நூல்களும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு இருக்கிறது. அவைகளில் தலைமையானது மகாபுராணம் என்பதாகும். இது ஆதிபுராணம், உத்ரபுராணம் என்ற இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. ஆதி புராணத்தை ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜினசேனர் இயற்றியுள்ளார். உத்திர புராணத்தை பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த குணபத்திரர் எழுதியுள்ளார். இந்த இரண்டு புராண பகுதிகளும். அறுபத்தி மூன்று மகா ஞானிகளை பற்றிய விஷயங்களை கூறுகின்றன.

இது தவிர எட்டாம் நூற்றாண்டில் ஸ்ரீ ராமருடைய வாழ்க்கையை பற்றி எழுதியுள்ள பதும புராணத்தை ஜைன ராமாயணம் என்றும் அழைக்கிறார்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வாழ்க்கையை பற்றி ஜினசேனர் எழுதியுள்ள ஹரி வம்சம் என்னும் நூலை ஜைன பாரதம் என்றும் அழைக்கிறார்கள்.

ஜைனர்கள் இலக்கணம், நிகண்டு, அலங்காரம், தர்க்கம், கணிதம் சம்மந்தப்பட்ட பல நூல்களை எழுதி மக்கள் பயன்படும் வண்ணம் தந்திருக்கிறார்கள். ஆயிரம் நூல்களையும் ஆயிரம் உபதேசங்களையும் ஜைனர்கள் தந்திருந்தாலும் கூட அவர்கள் சொல்லிய அஹிம்சா தர்மமே மிக சிறந்த தர்மம் என்று உலகோரால் போற்றபடுகிறது.

கண்ணில் தென்படுகின்ற தென்படாத எல்லா உயிர்களையும் தன் உயிர் போலவே மதிக்கும் உயர்ந்த பண்பாட்டை இந்து மதத்தின் ஆதர வேதத்திலிருந்து எடுத்து பாமரரும் பயன்படும் வண்ணம் உலகுக்கு தந்த வர்த்தமான மாகாவீரரும் இன்றும் என்றும் நிலைத்திருக்கும் சனாதன தர்மத்தின் மிக முக்கிய தூண் என்றால் அது மிகையாகாது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

ஆன்மிகமலர்
மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# ஆன்மீக வழியில் அமைதி



www.aanmeegamalar.com
e-magazine
aanmeegamalar.com

ஜீவர்கள் உயிருடன் இருக்கும்போது முக்தியாவதை விதேகமுக்தி என்று சாஸ்திரம் கூறுகிறது. விதேகமுக்தியால் ஜீவர்களுக்கு என்ன பலன் ஏற்படுகிறது? விதேகமுக்தியால் ஜீவர்களாகிய நாம் இரண்டு பலன்களை அடையலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒன்று ஜீவர்கள் உலகில் உயிருடன் இருக்கும்போது மனதளவில் உடலளவில் அனுபவிக்கும் உலகில் காணும் அனைத்து துயரங்களில் இருந்து விடுதலை அடைவது. மற்றொன்று ஜீவமுக்தர்கள் அனைத்துக் கர்ம பந்தங்களிலிருந்து விடுதலை பெற்று ஜீவன் முக்திநிலை அடைவது ஆகும். அதாவது அனைத்து ஜீவராசிகளிடமும் இறைவன் பிரம்ம ஸ்ரூபமாக இருக்கிறான் என்று ஜீவன்கள் தெளிவான உறுதியான ஞானநிலையை அடைவது ஆகும். அதாவது விதேக முக்தி அடைந்த ஜீவன்கள் மீண்டும் உலகில் பிறப்பதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது.

வேதாந்தம் முக்திநிலையை ஜீவ முக்தி, விதேக முக்தி என இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுகிறது. ஜீவன்கள் உயிருடன் இருக்கும்போது மனநிறைவு அடைவது ஜீவ முக்தி ஆகும். உலகில் ஜீவன்கள் மீண்டும் பிறவாமை விதேக முக்தி ஆகும். மேலும் ஜீவமுக்தியை சோக நாசம் என்றும், விதேக முக்தியை கர்ம நாசம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது ஜீவனிடமிருக்கும் கர்ம வினைகள் எல்லாம் சோக நாசம், கர்ம நாசம் அடைதல் என்று கூறப்படுகிறது. விதேகமுக்தி அடைந்த

72

ஜீவர்கள் அனைவரும் கர்ம பலன்களின்படி மீண்டும் பிரபஞ்சத்தில் பிறப்பதில்லை.

தியானம், மந்திரம், ஜபம், பஜனை போன்ற வழிமுறைகளில் நாம் ஆன்ம ஞானத்தை பெறலாம் என்று வேதாந்தம் கூறுகிறது. அதாவது வேதாந்த வாக்கியத்தின் மூலம் நாம் ஞானத்தை அடைய முடியும். பொதுவாக வேதாந்த வாக்கியத்தை நாம் நேரடியாக படித்துப் புரிந்து கொள்வதற்கு முடியாது. அதற்கு அனுபவம் உள்ள ஆன்மீக குருவின் மூலம் வேதாந்தம் கற்று அதன் மூலம் ஞானத்தை பெற வேண்டும். அதாவது வேதாந்த வாக்கியத்தை கற்றுத் தெளிந்த குருவின் மூலம் நாம் கேட்டு ஞானத்தைப் பெற வேண்டும். நாம் ஆன்மீக குருவாக ஏற்றுக்கொண்டவர் அவர் அனுபவம் உள்ள ஆன்மீக குருவிடம் சிஷ்யனாக இருந்து வேதாந்த முறையில் கற்று அவர் பயிற்சி பெற்றவராக இருந்திருக்க வேண்டும்.

நாம் பரம்பரை குருவிடம் சிஷ்யனாக இருந்து வேதாந்த முறையில் கற்க வேண்டும். அதாவது நாம் அனுபவம் உள்ள ஆன்மீக குருவிடம் சிஷ்யனாக இருந்து வேதாந்தம் கற்று அறிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்து கொண்டால்தான் கற்றுத் தெளிந்த சிஷ்யன் அவன் மற்றவர்களுக்கு ஆன்மீக குருவான பிறகு தன்னிடம் சிஷ்யனாக சேரக்கூடியவர்களுக்கு அவர்கள் கேட்கும் ஆன்மீகம் குறித்த சந்தேகங்களுக்கு அவரால் பொறுமையாகவும் தெளிவாகவும் பதிலும் உபதேசமும் செய்வதற்கு முடியும். சத்குரு என்றால் பரம்பரையில் வந்த குரு என்று அர்த்தம். ஆன்மீக குருவாக இருப்பவர் ஞானத்தில் நிலை பெற்றவராக இருக்க வேண்டும். அவர் ஞானத்தில் நிலைபெற்றவரா என்று நாம் எளிதில் அறிந்து கொள்வதற்கு முடியாது. ஆனால் பரம்பரை குருவாக இருந்தவர் என்பதை நாம் அறிந்து கொள்வதற்கு முடியும். அவரிடம் சென்று நாம் சிஷ்யனாக இருந்து வேதாந்த உபதேசங்களை நன்கு கற்று ஞானகுருவாக உயர்வதற்கு முடியும்.

உலகில் காணும் அனைத்து ஜீவராசிகளிலும் பிரம்ம ஸ்ரூபம்தான் இருக்கிறது. இதனை நாம் மனதில் வைத்து அனைத்து ஜீவராசிகளையும் நேசிக்கும் மனநிலையை மனதில் தவறாமல் கொண்டு வரவேண்டும். இதனை வடலூர் வள்ளல் பெருமான் ஜீவகாருணிய ஒழுக்கம் என்று நமக்கு உபதேசம் செய்துள்ளார்.


எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பொதுவாக நாம் உலகில் வாழும் அனைத்து மனிதர்களிடம் உள்ளொன்று வைத்து புறமொன்று வைத்து பேசி பழகி வருகிறோம். அதாவது இவன் நல்லவர் இவன் கெட்டவன் மற்றும் ஜாதி, மதம் என்று வேறுபாடுகளைப் பார்த்து பழகிக்கொண்டு இருக்கிறோம்.

கடவுள் பிரபஞ்சத்தில் நல்லவன், கெட்டவன், ஜாதிமதம் போன்றவற்றைப் படைக்கவில்லை. மனிதர்கள்தான் இவற்றை எல்லாம் தங்கள் மனதில் தோன்றியபடி சிந்திக்காமல் தங்களுக்குச் சாதகமாக படைத்துக்கொண்டார்கள். நாம் உலகில் காணும் அனைத்து ஜீவராசிகளிடமும் நம்மையும் அறியாமல் இப்படிப்பட்ட ஒருவகையான அற்பத்தனமான புத்தியை வைத்துள்ளோம். இப்படிப்பட்ட மனிதர்களை நினைத்துதான் 'உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்று வடலூர் வள்ளல்பெருமான் அருட்பா விண்ணப்பம் மூலம் இறைவனிடம் மனம் உருகி வேண்டுகிறார்.

ஈஸ்வரன் உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் நம்மைப்போல் படைத்துள்ளார் என்பதை மனதில் வைத்து நாம் செயல்படும்போது, உயர்ந்தவை, தாழ்ந்தவை, ஜாதிமதம் போன்ற வேற்றுமைகளை ஜீவராசிகளிடம் பார்க்கமாட்டோம். வள்ளல்பெருமான் அனைத்து ஜீவராசிகளிடம் அன்பு வைத்ததால்தான் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வருந்திக் கூறியுள்ளார். அனைத்து ஜீவராசிகளையும் தன் உயிர் போன்று நினைத்து செயல்படும்போது நம்மையும் அறியாமல் உயிர்கள் மீது இரக்கம் கொண்டு நேசிக்க ஆரம்பித்து விடுவோம். எல்லாம் சிவமயம் என்று கூறுவது இதன் காரணமாகத்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக உலகில் காணும் அனைத்து உயிர்களும் பிரம்ம ஸ்ரூபம் என்று நினைப்பவர்கள்தான் ஜீவன் முக்தர்களாக கருதப்படுகிறார்கள். ஜீவர்கள் என்றால் ஸ்தூல உடலிலிருந்து கொண்டு ஜீவித்துக் கொண்டிருப்பவர்கள்.

ஜீவமுக்தர்களிடம் அதே ஸ்தூல சரீரம் அதே பஞ் சபூதங்கள் எல்லாம் இருக்கிறது. அவ்வாறு அவர்களிடம் இருந்தபோதிலும் அனைத்து ஜீவராசிகளையும் பிரம்ம ஸ்ரூபமாக மனதில் நினைத்து அவர்கள் செயல்படுவதால் ஜீவமுக்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.


e-magazine aanmeegamalar.com



பொதுவாக உலகில் காணும் அக்ஞானத்திலிருந்து விடுதலை அடைவது முக்தி நிலையாகும். மேலும் பயம், துயரம், கோபம் பொறாமை, ஆசை ஜாதிமத வேற்றுமைகள் போன்றவற்றிலிருந்து விடுதலை பெற்றவர்கள் ஜீவ முக்தர்களாகக் கருதப்படுகிறார்கள். ஜீவன்கள் முக்தி நிலை அடைவதுதான் ஞானத்தின் பலன் ஆகும். ஜீவமுக்தி அடைந்தவர்களுக்கு எல்லாமும் இருக்கிறது. மனநிம்மதியும் நிறைந்து இருக்கு. ஆனால் சிலர் ''உலகில் காணும் அனைத்து வசதிகளும் எனக்கு குறைவில்லாமல் நிறைந்து இருக்கு, ஆனால் எனக்கு மனநிம்மதி மட்டும் இல்லை'' என்று புலம்புவார்கள். உலகில் வசதியற்றவர்களாக இருந்தாலும் மன அமைதியுடன் மன நிறைவுடன் வாழ்பவர்கள்தான் ஜீவ முக்தர்களாகக் கருதப்படுகிறார்கள்.

அதாவது பூரணமாக மனநிறைவுடன் உலக வாழ்வில் திருப்தி அடைந்தவர்களை ஜீவமுக்தர்கள் என்று கூறலாம். அதாவது உலக வாழ்வில் சோகத்திலிருந்து துயரங்களிலிருந்து விடுதலை அடைந்தவர்கள். உலகில் காணும் அனைத்து ஜீவராசிகளிடமும் பிரம்ம ஸ்ரூபத்தை காண்பவர்கள் ஜீவமுக்தர்கள். தெளிவான ஞானம் தெளிவற்ற ஞானம் என்று ஞானநிலையை இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. உண்மை நிலையை அறிந்து கொள்ளாமல் தனக்குத் தெரிந்த அனுபவம் அல்லது அனுமானத்தின் பேரில் கூறும் ஞானம் தெளிவற்ற ஞானம் ஆகும்.

எடுத்துக்காட்டாக நெடுந்தொலைவில் உள்ள ஒரு. மலையின் மீது ஒரு பகுதியிலிருந்து புகை போவதை பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு நாம் மலையின் மீது புகையைப் பார்த்தவுடன் மலையில் தீ எரிந்துகொண்டு இருக்கிறது என்று அனுமானத்துடன் கூறுகிறோம். மலையில் ஜுவாலையுடன் தீ எரிவதை நாம் நேரில் பார்க்கவில்லை. மலையின் மீது ஒரு பகுதியிலிருந்து புகை போவதைப் பார்த்து தீ எரிகிறது என்று அனுமானத்துடன் கூறுவதைப்போன்று தெளிவற்ற ஞானம் ஆகும். தெளிவான ஞானம் என்றால் நாம் மலையில் ஜுவாலையுடன் தீ எரிவதை நேரில் பார்ப்பதைப் போன்றது.

ஜீவர்களாகிய நமக்குள் பராமாத்மா அல்லது பிரம்மன் இருக்கிறார் என்று ஞானம் தோன்றினால் அது தெளிவற்ற ஞானம் ஆகும். நான் அந்த பராமாத்மாவாகவே இருக்கிறேன் நானும் பராமாத்மாவும் வேறுவேறு அல்ல. நானும் பராமாத்மாவும் ஒன்றுதான் என்று ஜீவர்களாகிய நமக்கு ஞானம் வரப்பெற்றால் அது மிகத்தெளிவான ஞானநிலையாகும். அதாவது பூரணமான ஞானம் உறுதியான ஞானமாகவும், யாராலும் அசைக்க முடியாத ஞானமாகவும் அந்த ஞானம் இருக்கும்.

நாம் எப்போதும் எந்தவிதமான குற்றம் குறைகள் இல்லாமல் உடலளவில், மனதளவில் இருக்கிறமோ அப்போது நாம் ஜீவன் முக்தர்கள். அவ்வாறு குற்றம் குறைகள் நமது

உடலளவில் இருந்தாலும் அதனை மனதில் நாம் அவற்றை ஒரு குறையாகக் கருதாமல் அதனைப் பொருட்படுத்தாமல் ஞானநிலையில் வாழ்ந்து வருகிறவர்கள் ஜீவன் முக்தர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

நாம் நமது ஸ்தூல உடலை 'நான்' என்று உறுதியாக மனதில் எண்ணிக்கொண்டு செயல்படுகிறோம். அதுபோல் நான் பிரம்மனாக, பராமாத்மாவாக இருக்கிறேன் என்று நமது மனதில் உறுதியான எண்ணம் எப்போது வருகிறதோ அப்போது நாம் ஜீவமுக்தர்களாகக் கருதப்படுவோம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது நாம் பூரண ஞானம் அடைந்தவுடன் நமது ஸ்தூல சரீரத்தை 'நான் அல்ல' என்று உறுதியாக எண்ணி நாம் செயல்பட ஆரம்பித்து விடுவோம்.

பொதுவாக நான் ஸ்தூல சரீரமாக இருக்கிறேன். நான் ஆணாக அல்லது பெண்ணாக இருக்கிறேன் என்று யாரும் நம் மனதில் நினைக்கும்படி கூறவில்லை. அவ்வாறு கூறவில்லை என்றாலும் அவைகள் நமது மனதில் இயல்பாகத் தோன்றி ஆண், பெண் என்று இயல்பாக நம்மையும் அறியாமல் எண்ணிக்கொண்டு இருக்கிறோம். அதேபோல் உலகில் காணும் ஏதோ ஒன்றின் மீது அளவுகடந்த பற்றுக் கொண்டிருப்பதால் உடளவில், மனதளவில் துயரநிலையை சந்திக்க நேரிடுகிறது.

எடுத்துக்காட்டாக ஒருவன் வீடு வாங்க வேண்டும் என்று எண்ணுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் வீடு வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் கடுமையாக உழைத்துப் பணத்தை ஈட்டுகிறான். அவ்வாறு அவன் ஈட்டிய பணத்தைப் பாதுகாப்பதில் அல்லும் பகலும் தூங்காமல் அதனையே எண்ணிக்கொண்டிருக்கிறான். அவன் வீடு வாங்குவதில் உடல் அளவில் மனதளவில் அவனை அறியாமல் துயரப்படுகிறான். அதனால் மனநிம்மதியை அவன் அவனையும் அறியாமல் இழந்து கொண்டிருக்கிறான்.

உலகில் எதிலும் பற்று இல்லாதவனை ஞானி என்று கருதப்படுகிறான். இல்லறத்தில் இருந்துகொண்டு ஞானம் அடைந்தவர்கள் இல்லறஞானி என்று கூறுவார்கள். மிதிலையை ஆண்ட மன்னன் ஜனகர் பற்றற்று நாட்டை ஆட்சி புரிந்ததால் அவனை இல்லறஞானி என்று இராமாயணம் கூறுகிறது. அதாவது அவன் தாமரை இலைத்தண்ணீர்போல் பற்றற்று வாழ்ந்து வந்தான். அவன் துன்பங்களைக் கண்டு துவளுவது இல்லை. இன்பத்தைக்கண்டு துள்ளிக் குதிப்பதும் இல்லை. அவன் மனம் அமைதியான நீரோடைபோன்று இருந்தது. சத்தாக சித்தாக ஆனந்தமாக பிரகாசமாக இருப்பவன் சச்சிதானந்தம் ஸ்ரூபம் என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த சச்சிதானந்தம் ஸ்ரூபத்தை யாரும் மறைக்கவோ, அழிக்கவோ முடியாது என்று சாஸ்திரம் கூறுகிறது.

சூரியனை மேகம் மறைக்கிறது என்று கூறுவோம். உண்மையில் சூரியனை மேகம் மறைக்கவில்லை. நம் பார்வையிலிருந்து சூரியன் மேகத்தின் மூலம் மறைவதுபோல் நமக்குத் தோன்றுகிறது. சூரியன் எப்போதும்போல் வானில் ஒரு பகுதியில் பிரகாசித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதுபோல் உலகில் காணும் அனைத்து ஜீவராசிகளிடமும் ஆத்மா இருக்கிறது. ஆத்மாவை அக்ஞானம் மறைத்துக்கொண்டு இருக்கிறது. அதாவது மேகம் சூரியனை



மறைப்பதுபோல் உலகம் என்னும் மாயை ஆத்மாவை மறைத்துக்கொண்டு இருக்கிறது.

மனிதர்களிடம் உள்ள ஒவ்வொரு குறையையும் கூறி அதிலிருந்து விடுதலை பெறுவதுதான் மோட்சம் என்று சிலர் உபதேசம் செய்வார்கள். அதாவது மனிதர்களிடம் காணும் உலக ஆசைகள்தான் ஞானத்திற்குத் தடையாக இருக்கிறது. உலக ஆசையை விட்டுவிட்டால் மோட்சம் கிட்டும் என்று சிலர் கூறுவார்கள். மனிதனின் கோபம்தான் மோட்சத்திற்கு மிகவும் தடையாக இருக்கிறது என்று ஒரு சிலர் கூறுவார்கள். மனிதன் தன்னுடைய கோபத்தை விட்டுவிட்டால் மோட்சம் என்னும் நிலையை அடையலாம் என்று கூறுவார்கள். நமது மனதளவில் உடலளவில் தோன்றும் அனைத்துவிதமான உலகத் துயரங்களிலிருந்து விடுதலை அடைவதுதான் மோட்சம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

aanmeegamalar.com e-magazine

## கட்டாய சந்தா இல்லை!

## சப்ஸ்கிரைப் இல்லை!!

## மாற்று மத திணிப்பு இல்லை!!!

**தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்**

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

**ஒரே கிளிக் 175 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்**

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்



# மேரு மலையின் ஒருதுளியால் உருவான பவளமலை

ஒரு முறை வாயுபகவானுக்கும், ஆதிசேஷனுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. அது படிப்படியாக பெரியதாகி, அவர்களில் யார் பெரியவர்? என்ற போட்டி எழுந்தது. அந்த போட்டி போராக மாறியது. தங்கள் பலத்தையும் சக்தியையும் காட்டி அவர்கள் போர் செய்தனர். யாரும் யாரையும் வெல்ல முடியாத நிலை. வாயுபகவான் தனது சக்தியை எல்லாம் திரட்டி மேரு மலையை தகர்த்துக்காட்டுகிறேன் என்று சவால் விட்டு மலையுடன் மோதுகிறார் காற்றின் வேகத்தை தாங்க முடியாக மேரு மலையின் சில பாகங்கள் மலையை விட்டு பறந்தன. அதில் ஒரு துளி விழுந்த இடம்தான் பவளமலை என்கிறது பவளமலையின் தல புராணம். மகேசனாகிய சிவபெருமான் இந்த கோவிலில் குடியிருந்து அவரை நாடி வரும் மக்களுக்கு நல்லாசி வழங்குகிறார். இந்த லிங்கமானது, அருகில் உள்ள ஒரு விவசாய தோட்டத்தில் உழவுப்பணி செய்யும்போது சுயம்புவாக தோன்றியது என்றும், அதையே எடுத்து வந்து மலைமீது வைத்து தொன்று தொட்டே வணங்கி வருவதாகவும் தல புராண கதை கூறுகிறது.

**கோயில் சிறப்புகள்:**

இங்குள்ள கைலாசநாதர் லிங்கம் சுயம்புவாக தோன்றியது என்பது சிறப்பு.

அருள்மிகு முத்துக்குமாரசாமி அழகிய குன்றில் சுமார் 60படிகள் ஏறிச்சென்றால் திருக்கோவில் மூலவரை தரிசனம் செய்யலாம் அழகன் முருகன் என்ற சொல்லிற்கு ஏற்ப மூலவர் ஸ்ரீ முத்துக்குமாரசாமியின் அழகு முகம் காண்போர்க்கு பக்தி பரவசத்தில் ஆழ்த்தும் .

பவளமலை முருகனை காண படியேறி சென்றால் அதுவரை பக்தர்களின் எண்ணங்களில் குடிகொண்டிருந்த துன்பங்களும், துயரங்களும் காணாமல் போகும் என்பதே நம்பிக்கை.

இந்த கோவிலும் பச்சைமலையில் முருகக் கடவுளை வைத்து வழிபாடு செய்த துர்சாவ முனிவரால் உருவாக்கப்பட்டது என்றே கூறப்படுகிறது.

பவளமலை கோவிலில் சிவபெருமானுக்கு ஈடாக முருகபெருமானை கொண்டு நடைபெறும் திரிசத அர்ச்சனை சிறப்பு மிக்கதாகும்.

e-magazine
aanmeegamalar.com



திரி என்றால் மூன்று, சதம் என்றால் நூறு. திரிசதம் என்பது முந்நூறு. அதாவது முருக பெருமானுக்கு செய்யப்படும் புகழ்மிக்க அர்ச்சனை இது. ஆறுமுகக்கடவுள் என்று போற்றப்படும் முருகன், பன்னிரு கைகள், ஆறு முகத்துடன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று சிவபெருமானை போன்று ஐந்தொழில்களையும் மேற்கொள்பவராக இருக்கிறார். அவருக்கு புகழ் சேர்க்கும் வகையில் அவரது ஒரு முகத்துக்கு 50 அர்ச்சனைகள் வீதம், ஆறு முகங்களுக்கும் சேர்த்து 300 அர்ச்சனைகள் செய்வதே திரிசத அர்ச்சனை.

சூரபத்மனை வதம் செய்து இந்திரலோகத்து தேவர்களை எல்லாம் முருக கடவுள் மீட்டார். எனவே அவருக்கு புகழ் சேர்க்கும் வகையில் தேவர்களின் அரசன் இந்திரன் தலைமையில் தேவர்களால் செய்யப்பட்ட அர்ச்சனையே திரிசத அர்ச்சனை. எனவே எதிரிகளை வீழ்த்தும் திரிசத அர்ச்சனை என்றும் இது அழைக்கப்பட்டது.

முருகன் சந்நிதி அருகில் கைலாசநாதர் லிங்கம் அருகிலுள்ள வயல்வெளியில் புதைந்துஇருந்தது. விவசாயிகள் வயலை உழும் போது லிங்கம் கிடைத்தது. விவசாயிகள் இதனை எடுத்து வந்து கோயிலில் பூஜித்துவருவதால் அதை சுயம்புலிங்கமாக (தானாகவே தோன்றும் லிங்கம்) கருதுகின்றனர். கைலாசநாதரை வணங்கினால் நோய் குணமடைகிறது.

மூலவர் முத்துக்குமார சுவாமி பிரம்மசாரியாக எழுந்தருளியுள்ளார். வாயு மூலையில் வள்ளி தெய்வானைமுருகனைத் திருமணம் செய்து கொள்வதற்காக தவம் இருக்கின்றனர். அதாவது, திருமணத்துக்கு முந்தைய வள்ளி, தெய்வானையை இங்கு தரிசிக்கலாம். கைலாச நாதர், பெரியநாயகி அம்பாள் சந்நிதியும் உள்ளது. செவ்வாய் காலை சுவாமிக்கும், அம்பாளுக்கும் பால் அபிஷேகம் செய்யப்படுகிறது.

பச்சைமலை, பவளமலை எங்கள் நாடு, பரமேஸ்வரன் வாழும் மலை எங்கள் நாடு என்ற குற்றாலக் குறவஞ்சியில் ஒரு வரி இருக்கிறது. அதில் குறிப்பிடப்படுவதும், முல்லைக்கு தேர்கொடுத்த பாரி ஆண்ட பகுதி என்ற பெருமை கொண்டதும் இந்த பவள மலையே.

**திருவிழா:**

திருக்கார்த்திகை, சித்ரா பவுர்ணமி, வைகாசி விசாகம், கந்த சஷ்டி, தைப்பூசம்

**திறக்கும் நேரம்:**

காலை 6 மணி முதல் 1 மணி வரை,
மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

**முகவரி:**

அருள்மிகு முத்துகுமார சுவாமி திருக்கோயில் பவளமலை, ஈரோடு.

**போன்:**

+91 97157 40960

அமைவிடம்:

ஈரோட்டில் இருந்து 35 கி.மீ., தூரம் கோபிசெட்டிப்பாளையம். அங்கிருந்து அந்தியூர் டவுன் பஸ்சில் 3 கி.மீ., சென்றால் முருகன்புதூர் பஸ் ஸ்டாப். அருகில் கோயில்.


– அமுதா அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.
செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com

# நொய்டா கோவில்களில் கணேஷ் சதுர்த்தி உற்சவம் நிறைவு








ஸ்ரீ மகா கணபதி, சண்டி ஹோமம், மஹான்யாச ஏகாதச ருத்ர ஜப ஹோமம், நவகிரகம் மற்றும் விநாயக சதுர்த்தி விழாவின் ஒரு அங்கமான அபிஷேகம், 'உலக அமைதிக்காகவும்', இரண்டு நொய்டா ஆலயங்கள்: செக்டார் 62ல் உள்ள ஸ்ரீ விநாயகா கார்த்திகேயா ஆலயம் மற்றும் செக் 22ல் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம்.

தினமும் மாலையில், ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் (விஎஸ்எஸ்) மற்றும் வேதிக் பிரசார் சன்ஸ்தான் இணைந்து நடத்திய ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் குழு பாராயணம் நடந்தது. கோவில் நிர்வாகம் பக்தி பாடல்கள்,அடுத்த தலைமுறை மற்றும் பக்தர்களின் இசை நிகழ்ச்சியும், ஸ்கந்தனின், புல்லாங்குழல் கச்சேரி நடைபெற்றன.

தினமும் விநாயகருக்கு மாலையில் குறிப்பாக சந்தனம், விபூதி, வெள்ளியால் பிள்ளையாரை அலங்கரிக்கப்பட்டன.

கோவில் நிர்வாகம் பங்கேற்பாளர்கள் அனைவரையும் கௌரவித்ததுடன், ஸ்பான்சர்கள், தன்னார்வலர்கள், மகளிர் பிரிவினருக்கு நன்றி தெரிவித்ததுடன், கமிட்டி உறுப்பினர்களைப் பற்றி சிறப்பாக குறிப்பிடப்பட்டது. அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அயராத சேவை காரணமாக, இந்த விழா சிறப்பாக நடந்தன என தெரிவித்தனர். நிறைவு நாளில், நொய்டாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அண்டை பகுதிகளிலிருந்தும் வந்த பக்தர்கள், செக் 22க்குள் எடுக்கப்பட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அனைத்து பூஜைகளும் ஹோமங்களும் ஆஸ்தான வாத்தியார் ஸ்ரீராம் மேற்பார்வையில், ஜெகதீசன் சிவாச்சாரியார், மணிகண்டன் சர்மா, மோஹித் மிஸ்ரா, கணபதி, விக்னேஷ், விஸ்வேஸ்வர், உள்ளிட்ட பண்டிதர்கள் குழுவினரின் உதவியோடு நடைபெற்றது. மகா தீபாராதனைக்கு பின் அனைத்து நாட்களிலும் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது.


எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

e-magazine
aanmeegamalar.com

# நந்தி தேவர்

## வித்தியாசமான கோலத்தில் அமர்ந்துள்ள கோயில்களும்



சிவபெருமானின்,கயிலை மலையின் நுழைவு வாயிலில் அமர்ந்து அங்கு காவல் தெய்வமாக பாதுகாப்பவர் தான் நந்தி பகவான். இவர் சைவ சித்தாந்த மரபில் பிரதானமானவராக கருதப் படுகிறார்.

இவர் நந்தி ஷிலதா முனிவரின் மகனாகவும்!. காளையாகவும் சிவபெருமானின் வாகனமாகவும்!! கருதப்படுகிறார். இவர் சிவனின். ஆலயங்களில், சிவலிங்கத்தை முன் நோக்கி பார்க்கும் படியாக வடிவமைக்கப்பட்டுள்ளார்.

நந்திகள் ஐந்து வகை என்றும் அறியப்படுகிறது! ஆம் அவை ஆகம விதிகளின்படி சிவாலயங்களில் இடம்பெற்றுள்ளது!.

### 1. கைலாசநந்தி

இவர் சிவனின் அருகிலேயே உள்ளதால் இவரை கைலாசநந்தி என்கிறார்கள்!. இவர் அனைத்து சிவாலயங்களிலும் மூலவருக்குஅருகே அமைக்கப்பட்டுள்ளார்.

### 2. அவதாரநந்தி

சிவபெருமானுக்கு வாகனமாக, திருமால் நந்தியாக மாறியதால், அவதாரநந்தி என்று பெயர் பெற்றார். இவர் சிவாலயங்களில் கைலாசநந்திக்கு அடுத்து அமைக்கப்பட்டுள்ளார்.

### 3. அதிகாரநந்தி

இவர் சிவாலயங்களில் சிவனை தரிசிக்க வருபவர்களை அனுமதிக்கும் அதிகாரம் கொண் டுள்ளதால் இவரை அதிகார நந்தி என்கிறார்கள்!. இவர் சிவாலயங்களில் மூன்றாவதாக அமைக் கப்பட்டுள்ளார்.

### 4. சாதாரணநந்தி

இவர் அனைத்து சிவாலயங்களிலும் இடம்பெற


e-magazine aanmeegamalar.com

வில்லை! ஆனால் இவர் சிவாலயங்களில் நான் காவதாக அமைக்கப்பட்டுள்ளார்.

### 5. பெரிய நந்தி

இவர் சிவாலயத்தின் நுழைவு வாயிலில் விஸ்வரூபத்தில் இடம்பெற்றிருப்பார்.

## வித்தியாசமான கோலத்தில் காட்சி தரும் நந்தி மற்றும் கோயில்கள்:

நந்தி பகவான், அனைத்து சிவாலயங் களிலும் ஒரே கோலத்தில்தான் காட்சி தருவார்.!... ஆனா லும் குறிப்பிட்ட சில கோ யில்களில் இவர் வித்தியாச மான கோலத்தில் காட்சி தருகிறார்.



### கருவறையை எதிர் கொண்டு பார்க்காமல் உள்ள நந்தி

இப்படிப்பட்ட நந்தி பகவான். திருவண்ணாமலை கிரிவல பாதையில் உள்ள அஷ்டலிங்க கோயில்களில் உள்ளார்.இவர் அங்கு கருவறையில் உள்ள லிங்கத்தை பார்க்காமல், திருவண்ணாமலையை பார்த்தவாறு உள்ளார் காரணம் திருவண்ணாமலேயே சிவரூபம் கொண்டுள்ளதால், இவ்வாறு அமர்ந்துள்ளார். அனைத்து சிவ ஆலயங்களிலும் கருவறையை பார்த்தவாறு தான் இருப்பார்!

### கருவறையை. மறைக்காமல் சற்று விலகி உள்ள நந்தி

இப்படிப்பட்ட நந்தி பகவான் திருப்புள்ளார் .பட்டீஸ்வரம்“ திருப்புன்கூர் திருப்பூந்துருத்தி ஆகிய சிவாலயங்களில் உள்ளார்!. காரணம் கருவறையில் உள்ள சிவபெருமானை கோயி லின் வெளியில் நின்று தரிசித்தாலும் லிங்கம் மறைக்காமல் இருக்க சிவபெருமானின் உத்தரவுப்படி இங்கு நந்தி பகவான் கருவறையை மறைக்காமல் சற்று விலகி அமர்ந்துள்ளார்.

### கருவறைக்கு, தன் புறமுதுகை காட்டியப்படி உள்ள நந்தி

இப்படிப்பட்ட நந்தி,”விருத்தாசலம் அருகே உள்ள. பெண்ணாடகம் எனும் தலத்திலுள்ள கொழுந்தீஸ்வர் ஆலயத்தில் உள்ளார்!. காரணம் ஒரு சமயம் இப்பகுதியில் பெரும் பழை பொழிந்து.. ஊரெல்லாம் வெள்ளம் சூழ்ந்து கொண்டதா... அப்போது அங்குள்ள மக்கள் இங்குள்ள சிவபெருமானிடம் தங்களை காப்பாற்றும்படி வேண்டியதால்.. சிவபெருமான் மக்களை வெள்ளத்தில் இருந்து காப்பாற்ற நந்தியிடம் ஊரில் சூழ்ந்துள்ள வெள்ளத்தை உறிஞ்சும் படி கட்டளையிட்டாராம்... அதன் படி நந்தி பகவான் கோயிலை விட்டு வெளியே வந்து கிழக்கு முகமாக நின்று ஊரில் தேங்கி இருந்த நீரை உறிஞ்சி, மக்களை காப்பாற்றியதாம்!. ஆம் அப்போது புறமுதுகை காட்டியபடி நீரை உறிஞ் சினார் அல்லவா... அந்த கோலத்திலேயே இப்போதும் புறமுதுகை காட்டியபடி இங்கு அமர்ந்துள்ளார். இது போல் சென்னை வடத்திருமுல்லை மற்றும் செய்யாறு தலத்திலும் உள்ளார்.

### வலது காது இல்லாமல் உள்ள நந்தி

இப்படிப்பட்ட நந்தி, கும்பகோணம் அருகே உள்ள. சேப்பெருமாநல்லூரில் உள்ள விஸ்வநாத சுவாமி கோயிலில் உள்ளது. காரணம், பிரளய காலத்தில் சிவபெருமான் எழுந்தருளி உள்ள இடம் தேடி நந்தி நந்தி பகவான் ஓடினாராம்.. அப்படி ஓடும் போது தடுமாறி விழுந்ததால் அவரின் வலது காது பாதிக்கப்பட்டது. அதனால் இங்கு வலது காது இல்லாமல் அமர்ந்துள்ளார்.

### வலது பின்னங்கால் இல்லாமல் உள்ள நந்தி

இப்படிப்பட்ட நந்தி பகவான் கொல்லிமலையில் உள்ள அறப்பளீஸ்வரர் சிவாலயத்தில் உள்ள நந்திபகவானுக்கு 1 உள்ளது. காரணம் ஒரு சமயம் இங்கு பக்கத்திலுள்ள புளியஞ் சோலையில் கடலை செடி பயிரிட்டு இருந்தார்களாம். அந்த கடலை தின்பதற்காக நந்தி அங்கு செல்ல அப்போது அங்கிருந்த காவலர்கள் நந்தியை தாக்கி வலது காலை வெட்டி விட்டார்களாம். பின்னர் ஒரு கால் இல்லாமல் கோயிலுக்கு வந்து அமர்ந்து விட்டாராம். இப்போதும் அப்படியே காட்சி தருகிறார்.



கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்

கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்,
பெங்களூரு 77.
போன்: 99724 66443

# ஒவ்வொரு விஷயத்திலும் உங்கள் அபிப்ராயம் எதுவோ அதுவே சுயமரியாதை

சீடன்: கேள்வி கேட்பது தவறா?

ஞானி: கேள்வி கேட்டபின் சிந்தனையாக மாறினால் தவறல்ல. .

சீடன்: சிந்தனை மட்டும் போதுமா?

ஞானி: போதாது. நிலை நிறுத்த முடியும் என்ற விஷயங்களைச் செய். முடியாத விஷயங்களை எப்படி முடிக்க வைக்க முடியும் என்று சிந்தி.

சீடன்: யார் முடிவு எடுக்க மாட்டார்கள்?

ஞானி: ஆசை உள்ள மனிதன்.

சீடன்: கடவுள் உருவத்தை ஏன் எடுத்தான்?

ஞானி: உலகிலுள்ள மாயையை அகற்ற.

சீடன்: பற்றறுத்தல் என்பது என்ன?

ஞானி: பற்றுக் கோடான இறைவனைப் பிடிப்பது.

சீடன்: முடிவு என்பது என்ன?

ஞானி: ஓயாமல் சுழன்று கொண்டிருக்கும் செயல்.

சீடன்: எதற்கு சிந்திக்க வேண்டும்?

ஞானி: சிறப்பான பொருளை தெரிந்து கொள்ள.

சீடன்: குருவை எப்போது புரிந்து கொள்ள முடியும்?

ஞானி: அன்பு என்ற தொடர்பு இருக்கும்போது.

சீடன்: பெரும்பாலோர்க்கு அது ஏன் முடிவதில் லை?

ஞானி: வெறும் உணர்ச்சிகளால் செயல்படுவதால்.

சீடன்: கடவுள் நிதர்சன உண்மை மயா?

ஞானி: ஆம். தெரிந்த விஷயம் மறைந்திருந்தாலும் உண்மையே.

சீடன்: அநேகர் மஹான்களின் எழுத்துக்களைப் படிப்பதி ல்லையே?

ஞானி: படித்தால் எழுதுவேன் என்பது இலக்கணமில்லை.

சீடன்: ரகசியம் என்பது என்ன?

ஞானி: சீக்கிரமாக ஒரு விஷயத்தை அடையும் முறை.

சீடன்: பூஜை சிந்திக்காமல் போவது எப்பொழு து?

ஞானி: மனமே இல்லாமல் செய்யும்போது.

சீடன்: அனுஷ்டானம், பூஜை வித்தியாசம் என்ன?

ஞானி: அனுஷ்டானம் மனதிற்குள் செய்வது. பூஜை வெளிப்படையாக செய்வது.

சீடன்: பக்தி என்பதற்கு ஒரு விளக்கம் தேவை சுவாமி?

ஞானி: உக்கிர நரசிம்மன் வெளிவரும்போது அவனை எவ்வளவு அழகாய் இருக்கிறான் என்று உண்மையில் உணர்ந்து உருகினானே பிரகலாதன், அதுதான் பக்தி.

சீடன்: அபிப்பிராய பேதம் வரலமா?

ஞானி: கல்வியில் வந்தால் முன்னேற்றம், உலக விஷயங்களில் வந்தால் தண்டம்.

சீடன்: சண்டைகளுக்கு காரணமென்ன?

ஞானி: திறமையின்மை.

சீடன்: சுயமரியாதை என்றால் என்ன?

ஞானி: ஒவ்வொரு விஷயத்திலும் உங்கள் அபிப்ராயம் எதுவோ அதுவே.

சீடன்: மனிதனுக்கு எது தேவை?

ஞானி: தானாக இயங்குகின்ற சிந்தனை திறன்.



சீடன்: ஞானம் நம்பிக்கையினால் வரு மா?

ஞானி: தாராளமாக. நம்பிக்கைஉயி ருக்கு பயன் தரும் என்று எண்ணும் பொழுது.

சீடன்: குருநாதர்களிடமிருந்து இந்த ஞானம் வர முடியுமா?

ஞானி: பணக்காரனிடம் இருந்து பணம் வரும் என்ற நம்பிக்கையே

e-magazine
aanmeegamalar.com

மனிதனுக்கு வரும்போது கருணையே உருவான ஞானிகளிடமிருந்தும், பக்தர் களிடமிருந் தும் ஞானமும் பக்தியும் ஏன் வராது?

**சீடன்:** உலக நெருக்கடியை தீர்க்க ஞானிகளின் அறிவுரை என்ன?

**ஞானி:** உலக மக்கள் அனைவரும் கடவுளிடம் அன்பு செலுத்தி பக்தி செய்தால் நெருக்கடி தீரும். பக்தி யின்மையே நெருக்கடிக்கு காரணம்.

**சீடன்:** கடவுள் பெயரைச் சொன்னால் மட்டும் போதுமா?

**ஞானி:** முருகா, இராமா என்ற பெயர்கள் சிறிய விளக்காகத் தோன்றலாம். நம்பிக்கையுடன் உணர்ந்தால் அதுவே கோடி சூரிய ஒளி.

**சீடன்:** தெய்வீகம், லௌகீம் என்ன வித்தியாசம்?

**ஞானி:** சிந்தனை, மனம், புத்தி, சித்தத்துடன் கலந்து செயல்படும்போது தெய்வீகம். இந்திரியங்களுடன் மூளை கலந்து செயல்படும்போது லௌகீகம்.

**சீடன்:** பக்தன் என்பவன் யார்?

**ஞானி:** உலகின் உண்மையான அறிவைப் பெறுகிறவன்.

**சீடன்:** இதற்கு குரு தேவையா?

**ஞானி:** ஆண்டவனிடம் மனதை வைக்கும் பயிற்சியை எங்கு பெறுகிறான் என்பதே முக்கியம். அந்த இடமே குருகுலம்.

**சீடன்:** குருநாதன் என்பது யார்?

**ஞானி:** எல்லாவற்றிற்கும் முடிவு இருக்கிறது, தெளிவு இருக்கிறது என்று சொல்பவனே குரு.

**சீடன்:** பிரம்மச்சாரியாக இருந்தால் தான் சாதகனாக முடியுமா?

**ஞானி:** எந்த ஆசிரமம் ஆனாலும் அதன் உண்மையை உணராமல் வாழ்பவன் கஷ்டப்படுவான்.

**சீடன்:** இதில் கருத்து வேற்றுமை வருமா?

**ஞானி:** வராது. வல்லவனுக்கு வல்லவன் என்ற சண்டை வரும்.பக்தனுக்கு பக்தன் என்ற சண்டை கிடையாது.

**சீடன்:** உலக வாழ்க்கை முக்கியமில்லையா?

**ஞானி:** இது பொருள் உலகம் என்பதால் உலக முக்கியத் துவத்தைப் பற்றி எல்லோரும் தான் சொல்கிறார்கள். பொருள்கள் மத்தியில் இருக்கும் பரம்பொருளை உணர்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

**சீடன்:** அப்படியனால் கிருகஸ்தாஸ்ரமும் முக்கியமானது தானே?

**ஞானி:** ஒவ்வொரு ஆசிரமத்திலும் ஒரு பொருள் முக்கியத் துவம் வாய்ந்தது. அந்த பொருள் இல்லாத வரை அந்த ஆசிரமம் சிறக்காது. அந்த பொருளை உணர்ந்து அமைதி அடைய வேண்டும்.

ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன்**

**C.V. நடராஜன்**

செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**



# புற்றிலிருந்து பிரசன்னமான ஸ்ரீ கல்யாண வெங்கடரமண பெருமாள்

கங்கையை விடவும் புனிதம் மிக்க “பொன்னி” என்று போற்றப்படும் காவிரி நதியின் கரையினில் வளம் மிகுந்த ஊர்களோடு, பல அற்புதங்கள் நடந்த மகிமைமிக திருத்தலங்களும் ஏராளம் உண்டு.

அவற்றுள் ஓர் உன்னதத் திருத்தலமாகப் போற்றப்படுகின்றது மோகனூர். கொங்கு வளநாட்டில் அமைந்த இந்தத் திருத்தலம் சைவ வைணவப் பெருமைகளை இன்றும் பரப்பி வருகின்றது. இங்கே காவிரிக்கரையை ஒட்டி ஸ்ரீ அசலதீபேஸ்வரர் திருக்கோவிலும், சற்று உட்புறமாக அதே வீதியில் ஸ்ரீ கல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள் ஆலயமும் அமையப்பெற்றுள்ளது சிறப்பு.

மேற்கிலிருந்து கிழக்காக பாயும் காவிரி நதி, இம்மோகனூரில் பகவானது திருவருளால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓடுகின்றது. இவ்வாறு தடம் மாறிப் பாயும் காவிரியின் அழகினை தனது மோகனப் புன்னகையுடன் ரசித்துக் கொண்டிருக்கிறார் ஸ்ரீ பிரசன்ன வெங்கடரமணர்.

ஆதியில் வில்வ மரங்கள் சூழ்ந்திருந்ததால் இத்தலம் ‘வில்வாரண்ய க்ஷேத்திரம்‘ என்று அழைக்கப்பெற்றுள்ளது. இங்கே காவிரி அன்னையும், ஸ்ரீ பிரம்மதேவரும் ஸ்ரீ லட்சுமி நாராயணர் வீற்றிருளும் நெல்லி மரமாக இருந்து, இத்தலத்தினில் எழுந்தருளும் ஸ்ரீ ஹரிக்குக் குடையாக நின்று, வணங்கி, நிழல் தந்துள்ளனர். அதோடு, இங்கு குடிகொண்டருளும் தனது தங்கையின் மணாளரான சிவபெருமானுக்கு மோஹன அவதார தரிசனத்தை காட்டியுள்ளார் கரிவரதர். இதனால் மோகனபுரி என்றும் மகனூர் என்றும் வழங்கப்பட்ட இப்பதி தற்போது மோகனூர் ஆகியுள்ளது.

### பக்தருக்காக பிரசன்னம்:

முன்னொரு காலத்தில் இம்மோகனூரில், திருவேங்கடவனின் மீது தீராத பக்தி கொண்ட பரமபக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். வருடா வருடம் திருமலை திருப்பதியில் கோலாகலமாய்

e-magazine
aanmeegamalar.com




e-magazine
aanmeegamalar.com

நடக்கும் பிரம்மோற்சவத் திருவிழாவில் கலந்துகொண்டு, ஏழுமலைவாசனது எழில்மிகு தரிசனத்தைக் கண்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதை தனது ஆயுள் முழுவதும் செய்ய வேண்டுமென உறுதி பூண்டிருந்தார்.

காலங்கள் ஓடியது. வயது முதிர்ந்தது. உடன் வாதநோயும் தொற்றிக் கொண்டது. வீட்டுக்குள் நடப்பதே வெறுங்கதை ஆனது. பின் எப்படி திருமலைக்கு செல்வது ?? மனம் வாடினார். குழந்தையைப் போல் அழத் தொடங்கினார். ஸ்ரீனிவாசரதி திவ்வியக் காட்சிகளை கண்முன் நிறுத்தி வேதனையடைந்தார்.

இனியும் தான் பயனில்லை என்று நினைத்து, காவிரியில் தன் உயிரை விட துணிந்தார். மெல்ல மெல்ல நகர்ந்து, கரை புரண்டோடும் காவிரியில் விழும் சமயம் மிகப்பெரிய நாகம் ஒன்று தோன்றியது. சீற்றமெடுத்து, அந்த பக்தரை அவர் வீடு வரை நகர்த்தியது. அவர் வீட்டிற்குள் புகுந்தவுடன் மறைந்தது. அவரும் அசதியின் காரணமாக தூங்கினார்.

இரவும் கடந்து போனது. விடியற்காலை பிரம்ம முகூர்த்த வேலையில் அவர் கனவில் தோன்றினார் திருமலையப்பன். "பக்தனே ! திருமலைக்கு நீ வரமுடியாமல் போனதால் நானே உன்னைத் தேடி இங்கு வந்துவிட்டேன். அருகில் உள்ள புற்றினுள் நான் இருக்கின்றேன். உனக்கு தரிசனம் தரவே திருமலையிலிருந்து இங்கு வீடு கொண்டுள்ளேன். உனக்கு பிரசன்னமாக காத்திருக்கின்றேன் என்னை தரிசித்து மனநிம்மதி அடைவாய்" என்று அருள்மொழிந்தார் அண்ணன்பெருமாள்.

உடன் கண் முழித்த அப்பக்தன் நடந்ததை ஊர் பெரியவர்களிடம் கூற....பாம்பு புற்றின் அருகில் சென்று பார்த்தனர். அங்கே தேவாதி தேவர்களுக்கும், மகரிஷிகளுக்கும்கூட காணக் கிடைக்காத மூர்த்தியாக, ஸ்ரீதேவி பூதேவியுடன் புற்றில் இருந்து வெளிப்பட்டார் புருஷோத்தமன்.

புற்றிலிருந்து பிரசன்னமானதாலும், கல்யாண கோலத்தில் சேவை சாதிப்பதாலும் அன்றிலிருந்து இப்பெருமாள் ஸ்ரீ கல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள் என்று பக்தர்களால் போற்றப்பட்டார். அது முதல் தன்னை நாடிவரும் பக்தர்களது மனக்குறைகளைப் போக்கி மகிமை பல புரிந்து வருகின்றார். இன்றும் இவரது திருச்சன்னிதியில் தானாகவே உருவாகும் புற்றுமண்ணை நோய் தீர்க்கும் மருந்தாக, அன்பர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகின்றது.

## கோவில்:

முதலில் கிழக்கு நோக்கிய மூன்று நிலை இராஜகோபுரம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே மூடுதள அமைப்புடன் ஒரே திருசுற்று கொண்டு திகழ்கிறது ஆலயம். நேராக... பலிபீடம் மற்றும் துவஜஸ்தம்பம். அதன் பின்னே கருடனது தரிசனம். கருடனை வணங்கி இரண்டாம் வாயிலுள் நுழைகின்றோம். சிறிய எட்டுக்கால் மண்டபம். இங்கே வடபுறமாக ஸ்ரீதேவி பூதேவியுடன் உற்சவத் திருமேனியராக அருள்பாலிக்கின்றார் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசர்.

பின் மூன்றாம் வாயில். இது கருவறையின் வாயிலாகும். கருவறையில் கருணை முகத்துடன், தனது தேவியர்களான ஸ்ரீதேவி பூதேவியுடன் சங்கு சக்கரதாரியாக சேவை சாதித்தருளுகின்றார் ஸ்ரீ கல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள். உச்சி முதல் பாதம் வரை அழகின் ஜொலிப்பு. இன்றெல்லாம்





e-magazine
aanmeegamalar.com

இப்பெருமாளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இவரது கீழ் இடது கரம் இடுப்பில் மடித் திருக்க... வலது கரமோ என் பாதங்களை சரணடையுங்கள். நல்வரங்கள் எல்லாம் கிட்டும் என்பது போல் அபயக் கரமாக அருள்மழை பொழிகின்றது. இவரது கருணைப் புன்னகை, திருமலை தரிசனத்தை திறம்பட நினைவு கூறுகின்றது. அளவில்லாத அழகில் மயங்கி, ஆலய வலம்கூட மறந்து போகின்றது.


பெருமாளை வணங்கி, வேண்டிய பின்னர் ஆலய வலம் வருகின்றோம். கோஷ்ட மாடங் களில் முறையே ஸ்ரீ சிந்தாமணி கணபதி, ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர், ஸ்ரீ லக்ஷ்மி வராகர், ஸ்ரீ விஷ்ணு துர்கை அலங் கரிக்கின்றனர்.

தென் பிரகாரத்தில் ருக்மணி சத்திய பாமாவுடன் ஸ்ரீ நவநீத கிருஷ்ணர் வீற்றருள் கின்றார். அருகே ஸ்ரீ சுதர்சன சக்கரத்தாழ்வார் அருள்பாலிக்கின்றார். தாயாராக ஸ்ரீ பத்மாவதி தாயார் தனியே சன்னிதி கொண்டு தாமரை பீடத்தின் மீது தயை புரிகின்றாள்.

மேற்கில் ஸ்ரீ தன்வந்திரியும், வடக்கில குடும்ப சகிதராக ஸ்ரீ இராமரும் அருட்காட்சி அளிக்கின்றனர். தல விருட்சமான வில்வமரத்தின் கீழே ஸ்ரீ பாலகணபதியும், ஸ்ரீ பால மாருதியும் குடியிருந்து திருவருள் பொழிகின்றனர்.

கிழக்கு பார்த்தபடி தனியாக தரிசனம் அளிக்கின்றார் ஸ்ரீ ஸம்மோகனர். எம்பெருமானின் மகிமை பொருந்திய அவதாரங்களுல் ஒன்று ஸ்ரீ கிருஷ்ண அவதாரம். அவரது லீலை மிகுந்த திருக்கோலங்களில் ஒன்றே ஸ்ரீ ஸம்மோகன கோபாலன். தனது கரங்களில்... சக்கரம், சங்கு, அங்குசம், தாமரை, கரும்பு வில், புஷ்பபாணம், புல்லாங்குழல் கொண்டு தனது உடலில் பாதியாக ஸ்ரீ ருக்மணியைக் கொண்டு, அர்த்தநாரி மூர்த்தியாக திருக்காட்சியளிக்கின்றார். இவருக்கு வாசனை திரவியங்களை சாற்றி (அர்தர், புனுகு, அரகஜா, ஜவ்வாது) முல்லைப் பூக்களால் அர்ச்சனை செய்து, கற்கண்டு, பசு வெண்ணெய் மற்றும் பழங்கள் நிவேதனம் செய்திட....குழந்தை பாக்கியம் கிடைக்கும். அதோடு, திருமணத்தடை நீங்கும். தம்பதிகள் இடையே நெருக்கும் அதிகரிக்கும்.

இராஜகோபுரத்திற்கு உட்புறமாக ஸ்ரீ துவார கணபதியும், ஸ்ரீ நாகராஜரும் ஸ்தாபிக்கப் பட்டுள்ளனர். அமைதியான ஆலயம். அழகால் மிளிர்கிறது.


மோ.கணேஷ்

## பிரார்த்தனைகள்:

1. பிரதி வாரம் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் துளசி மாலை அல்லது பூமாலை சாற்றி, துளசி மற்றும் மரிக்கொழுந்து ஆகியவற்றால் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து, கற்கண்டு, திராட்சை, பேரீச்சை, முந்திரி, பாதாம், பிஸ்தா போன்ற உலர் பழங்களை நிவேதனம் செய்து, தேங்காய் உடைத்து, வெற்றிலை





பாக்கு வாழைப்பழம் வைத்து படைத்து, எப்போதும் எரிந்துக் கொண்டிருக்கும் அகண்ட தீபத்தில் (அதாவது கருவறையில்) பசுநெய் சேர்த்து, “ஓம் நமோ நாராயணா” என்கிற நாமத்தை உச்சரித்து வழிபட....அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு வகை பலன்களையும்ப் பெறுகின்றனர் பக்தர்கள். அதோடு, திருமணம், குழந்தை, நல்ல கல்வி, சிறப்பான உத்தியோகம், வியாபார வளர்ச்சி போன்ற விசேடப் பலன்களையும் கூடுதலாகப் பெறுகின்றனர். திருமணத்தடை உள்ளவர்கள் திருக்கல்யாண உற்சவம் செய்வதாக பிரார்த்தனை செய்ய திருமண தடங்கள் நீங்குகிறது. குழந்தை வரம் வேண்டுவோர் போலோற்சவம் செய்து பலன் பெறுகின்றனர். திருவோண நட்சத்திரத்தில் அங்கப்பிரதக்ஷிணம் செய்தால் அனைத்து வித நோய்களும் நீங்கம்.

2. ஸ்ரீ பத்மாவதி தாயாருக்கு வெள்ளிக்கிழமை, வளர்பிறை பஞ்சமி மற்றும் உத்திர நட்சத்திரத்தில் வாசனை புஷ்பங்களை சாற்றி, தாமரையால் அர்ச்சனை செய்து, தீபத்தில் பசுநெய் சேர்த்து, கற்கண்டு கலந்த பசும்பாலை நிவேதனம் செய்து வழிபட....மிகுந்த செல்வவளம் உண்டாகும். சுக்கிரனால் ஏற்படும் தோஷங்கள் விளகி, நல்ல தாம்பத்திய சுகம் ஏற்படும்.

3. பிரதி மாதம் திருவோண நட்சத்திரத்தில் காலை பெருமாளுக்கு விசேஷ கலசாபிஷேகமும், ஸ்வர்ணதீப ஆராதனையும் நடக்கிறது. பின் ஐஸ்வர்ய லக்ஷ்மியுடன் ஸ்ரீ சத்யநாராயண பூஜை நடைபெறுகின்றது. இதுபோன்று மாலையும் ஸ்ரீ சத்தியநாராயண பூஜையும் தீபாரதனைகளும் நடத்தப்படுகின்றன. இந்த பூஜையில் அளிக்கப்படும் நார்த்தேங்காயை பெரும் பக்தர்கள், அதை வீட்டில் வைத்து தினமும் பூஜிக்கலாம். இதனால் அவர்களது துயரம் நீங்கி, சுபிட்சம் உண்டாகும் என்பது இங்கு நிலவும் நம்பிக்கையாகும்.

4. பிரதி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் நடைபெறும் சுதர்சன ஹோமத்தில் கலந்து கொண்டு வழிபட, தீய சக்திகளால் ஏற்படும் பயம் மற்றும் தீவினைகள் அகலும்.

5. ஸ்ரீ தன்வந்திரி பெருமாளை செவ்வாய்க்கிழமை தோறும் பாலபிஷேகம் செய்து, செவ்வரளி மாலை சாற்றி, சுக்குப்பொடியுடன் நாட்டுச் சர்க்கரை கலந்து நிவேதனம் செய்து, தீபத்தில் இலுப்ப எண்ணெய் சேர்த்து, 12 முறை வலம் வந்து வழிபட நீராத நோய்கள் நீங்கும்.

ஸ்ரீ கல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள் தாள்பணிந்து, அனேக வரங்களை பெற்று அற்புதமாக வாழ்ந்திடுவோம்.

**வழி:**

நாமக்கல் மாவட்டத்தில் ஓர் பேரூராக திகழ்கிறது மோகனூர். மோகனூர் பேருந்து நிலையத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ஆலயம்.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

e-magazine
aanmeegamalar.com

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவி தேவை



# விருப்ப சந்தா




**தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.**

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# ஹரிதாஸ்

ஸ்ரீரங்கநாதரின் சன்னிதியில் அர்ச்சகராகப் பணியாற்றி வந்தவர் கிருஷ்ண பட்டர்.

ஒருமுறை இவரது இல்லத்தில் சிலநாட்கள் தங்கியிருந்த புரந்தரதாசர், கிருஷ்ண பட்டரின் மகள் பிரேமாவுக்கு, சரிகமபதநி சப்த ஸ்வரங்களைப் போதித்தார்.

இதன் பின்னர், கர்நாடக சங்கீதத்தில் சிறந்து விளங்கிய பிரேமா, கோயிலில் ஆழ்வார் பாசுரங்களைப் பாடி வந்தாள்.

அவள் பாடுவதைக் கேட்கும் அனைவரும் மெய் மறப்பார்கள்.

இந்த நிலையில் ஏழ்மை நிலையில் இருந்த கிருஷ்ணபட்டர் தனது மகளை தூரத்து உறவுக் காரப் பையன் ஒருவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

அவனோ குடிகாரன், சூதாடி, இதைத் தாமதமாக உணர்ந்த பட்டர், தவித்து மனம் மருகினார். ஆனால், பிரேமா மனம் தளரவில்லை.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் அளவற்ற பக்தி கொண்டிருந்த அவள் ராமாயணம், பாகவதம் ஆகியவற்றைத் தொடர்ந்து படித்து வந்தாள்.

அவளுக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு ராமகிருஷ்ணன் எனப் பெயரிட்டு வளர்த்தாள்.

இந்த நிலையில் மது போதையில் காவிரி வெள்ளத்தில் சிக்கி இறந்தான் அவன் கணவன்.

மகளின் நிலை குறித்த கவலையால் மனம் உடைந்து போன கிருஷ்ண பட்டரும் இறந்து போனார்.

கணவனையும், தந்தையையும் இழந்த பிரேமா, ஸ்ரீரங்கத்தில் இருக்கப் பிடிக்காமல் குழந்தையுடன் வாரணாசிக்குச் சென்றாள்.

அங்கு தர்மசத்திரம் ஒன்றில் தொண்டாற்றி வந்தாள்.

காசியில் அனைவரும் அவளை, பிரேமா பாய் என்றே அழைத்தனர்.

அப்போது அவளின் மகன் ராமகிருஷ்ணனுக்கு வயது பத்து. தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசுவதில் திறன் பெற்றிருந்தான் அவன்.

மேலும், தனது தாயிடம் கர்நாடக சங்கீதமும் கற்று வந்த ராமகிருஷ்ணன் உபன்யாசம், கலாட்சேபம் போன்றவற்றைக் கூறக்கேட்டு



e-magazine
aanmeegamalar.com

ஸ்ரீகிருஷ்ண பக்தனாகவும் விளங்கினான்.

ஒருநாள் சத்திரத்துக்கு அடியார்கள் சிலர் வந்தனர். அவர்களை பக்தியுடன் வரவேற்றாள் பிரேமா பாய்.

இவர்களுக்கு உணவளித்து உபசரிக்கலாம். எனில், கங்கைக் கரையில் தினமும் நடக்கும் பாகவத உபன்யாசத்தைக் கேட்க முடியாது.

விருந்தினர்களை உபசரிக்காமல் இருப்பது தவறு. என்ன செய்வது? என்று தவித்தாள். சிறிது நேரம் யோசித்தவள்.

அடியவர்களுக்கு தாம் உணவளிப்பது, பாகவதம் கேட்க மகன் ராமகிருஷ்ணனை அனுப்பி பிறகு அவனிடம் விவரமாய் தாம் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று முடிவு செய்தாள்.

அதன்படி, ராமகிருஷ்ணனை பாகவதம் கேட்க அனுப்பினாள்.

உபன்யாசம் முடிந்து வீடு திரும்பிய ராமகிருஷ்ணனிடம், உபன்யாசத்தில் இன்று பவுராணிகர் என்ன சொன்னார்?

என்று ஆவலுடன் கேட்டாள்.

அம்மா! கிருஷ்ண பரமாத்மாவின் பிறப்பு, வளர்ப்பு, லீலைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறும் தசம ஸ்கந்தம் பற்றி விளக்கினார்.

குழந்தை கண்ணன் புழுதியில் விளையாடியது, வெண்ணெயைத் திருடி உண்டது, யசோதா துரத்தியும் பிடிபடாமல் ஓடியது ஆகியவற்றை விவரித்தார்.

கோலைக் கையிலெடுத்து அடிக்கப்போவதாய் யசோதா பயமுறுத்துகிறாள்.

குழந்தைக் கண்ணன் அழத் தொடங்குகிறான்.

ஏதேனும் ஒரு வகையில் கண்ணனைத் தண்டிக்க எண்ணி அவனை உரலோடு பிணைத்துக் கட்டுகிறாள் யசோதா. ஆனால், குறும்புக்காரக் கண்ணனோ கட்டிய உரலையும் சேர்த்து இழுத்தபடி வீட்டின் பின்புறம் சென்று ரெட்டையாக நின்ற மருத மரங்களுக்கு இடையே புகுந்தான்.

உபன்யாசத்தில் இன்று இதைத்தான் சொன்னார் என்றான்.

இதைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்ட பிரமோ பாய், மெய் மறந்தாள்.

நான் கண்ணனின் காலத்தில் இருப்பதாகவே எண்ணிக் கொண்டாள்.

கண்ணா!

உன்னையா உரலில் கட்டிப் போட்டார்கள்?

கயிறு இறுக்கி உன் வயிறு வலிக்குமே நீ மர இடுக்குகளில் நுழைந்து செல்லும் போது ஏதாவது பூச்சிகள் உன்னைக் கடித்தால் என்னாவது ?

என்னால் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

இப்போதே கயிறை அவிழ்த்து விடுகிறேன். என்றவாறு கங்கையை நோக்கி ஓடினாள்.

அம்மா... அம்மா என்று கூவியபடி சிறுவன் ராமகிருஷ்ணனும், அவளது பக்தியைக் கண்டு வியந்த அடியவர்களும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

பிரேமா பாய் கங்கை நதியில் குதித்தாள்.

அவள் விழுந்த இடத்தில் இருந்து ஓர் ஒளிப் பிழம்பு விண்ணை நோக்கிச் சென்றது.

ஜோதி வடிவாகச் செல்லும் பிரேமா பாயை அனைவரும் வணங்கினர்.

தந்தையைக் காவிரியிலும் தாயை கங்கையிலும் இழந்த ராமகிருஷ்ணன், தான் பிறந்த பூமியான ஸ்ரீரங்கத்துக்கு வந்தான்.

அங்கு அரங்கன் சன்னிதியில் கிருஷ்ண சைதன்ய மகாபிரபு பக்தர்களுடன் ஆடிப்பாடி ஆனந்த நிலையில் இருப்பதைக் கண்டு பரவசமுற்றான்.

நாடெங்கும் போய் பக்தியைப் பரப்பிய மகானான சைதன்ய மகாபிரபுவுடன் இணைந்து அவரைப் பின்தொடர்ந்தான்.

மொகாலய படையெடுப்பின்போது, பெர்ஷியா நாட்டுக்குச் சென்று மறைந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, பெர்ஷியன் சங்கீதத்தைக் கற்றுத் தேறிய ராமகிருஷ்ணன் திரும்பி வந்ததும் குருவின் ஆணைப்படி பிருந்தா வனத்தை அடைந்து ஸ்ரீகிருஷ்ண நாம சங்கீர்த்தனம், பாகவத சேவை என்று தனது வாழ்நாளைக் கழித்தான்.

இந்த ராமகிருஷ்ணனே பிற்காலத்தில் தீட்சை பெற்று, ஸ்வாமி ஹரிதாஸ் என்ற பெயரில் புகழ்பெற்றார்.

இவர் உருவாக்கியதே ஹிந்துஸ்தானி சங்கீதம்.

அக்பர் சபையில் ஆஸ்தான வித்வானாகத் திகழ்ந்த, தான்சேன் சங்கீதம் பயின்றது ஸ்வாமி ஹரிதாஸிடம் தான் என்பது குறிப்பிடத் தக்கது.



# ஹனுமனின் பசியை தீர்த்த ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீராமரின் பரம பக்தனான ஆஞ்சநேயனுக்கு விருந்து செய்விக்க வேண்டுமென்று ஒரு நாள் ஸீதாபிராட்டிக்குத் தோன்றியது.

குழந்தாய்! இன்றைக்கு உனக்கு என் கையால் சமைத்துப் போடுவேன். நீ இங்கே சாப்பிடு என்றாள் ஜானகி.

ஹனுமனும் மிக ஆர்வத்துடன் ஒப்புக் கொண்டார்.

ஸீதை தன் தோழிமார்களுடன் பலவிதமான சாப்பாடுகள் தயார் செய்து வைத்தாள்.

ஹனுமனும் ஸ்நானம் செய்து விட்டு த்வாதச நாமம் பாராயணம் செய்து கொண்டே ராம ராம என்று ஜபம் செய்து கொண்டே வந்து சாப் பாட்டில் உட்கார்ந்து கொண்டார்.

ஸீதை தன் தோழிமார்களுடன் பரிமாறினாள்.

ஹனுமனோ போடப் போட சாப்பிட்டுக் கொண்டேயிருந்தார்.

ஸீதையால் பரிமாறி மாளவில்லை.

ஸீதை சமைத்ததெல்லாம் தீர்ந்து விட்டது ஸீதாபிரட்டிக்கு என்ன செய்வதென்றேதெரிய வில்லை. இனிமேல் பரிமாறுவதற்கு ஒன்று மில்லை.

ஹனுமனோ போடு போடு என்கிறார்.

அந்த சமயம் பார்த்து லக்ஷ்மணன் அங்கு வந்தார்.

ஹனுமனின் பசியடங்க என்ன வழி? தெரியாத்தனமாகச் சாப்பிடக் கூப்பிட்டு விட்டேன் என்றாள் ஸீதை.

அடாடா! அவருக்குப் சாதாரண சாப்பாடு கட்டுக் கொள்ளுமா?

இந்த சாப்பாட்டிலெல்லாம் அவருக்கு த்ருப்தி வந்துவிடாது என்று

சொல்லிவிட்டு, ஒரு துளஸீ தளத்தில் சந்தனத்தால் ஸ்ரீராம நாமத்தை எழுதி அவர் இலையில் கொண்டு போட்டார் லக்ஷ்மணன்.

அவ்வளவு தான் ஆஞ்சநேயரோ உடனே அதை வாயில் போட்டுக் கொண்டு பெரிய ஏப்பம் விட்டவாறே உடனே எழுந்திருந்து போய் விட்டார்.



e-magazine
aanmeegamalar.com







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதா சமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

**பௌர்ணமியில் பெருமாளுக்கு கிரிவலம்**

**தேங்காய் துருவலே பிரசாதம்**

**வேண்டுதலை வைத்தவுடன் பலன்**

# புரட்டாசியில் தரிசிக்க வேண்டிய துறையூர் பெருமாள்மலை வெங்கடாஜலபதி

துறையூரில் இருந்து பெரம்பலூர் செல்லும் சாலையில், சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது பெருமாள் மலை. பெயர் சொன்னதுமே தெரிந்துவிடும்... இந்த மலை, பெருமாளுக்கான மலை. பெருமாள் பக்தர்களுக்கான மலை என்று! ஆமாம்... இங்கே... இந்த அழகிய மலையில் குடிகொண்டு சேவை சாதிக்கிறார் திருமால். இந்தத் தலத்தில் இவரின் திருநாமம் ஸ்ரீபிரசன்ன வேங்கடாசலபதி.

புராண காலத்தில் காவிரிக்கு வடக்கே உள்ள இந்த பூமி, தீர்த்தபுரி எனப் போற்றப்பட்டது. அதேபோல் வேணுவனம் என்றும் துறையூர் அழைக்கப்பட்டது. திருச்சியில் இருந்து சுமார் 45 கி.மீ. தொலைவிலும் பெரம்பலூரில் இருந்து சுமார் 35 கி.மீ. தொலைவிலும் உள்ளது துறையூர் பெருமாள்மலை திருத்தலம்!

மலையில்... ஸ்ரீதேவி பூதேவி சமேதராக, கிழக்குப் பார்த்தபடி காட்சி தருகிறார் பெருமாள். இவரைத் தரிசித்தால் நம் வாழ்வில் விடியல் நிச்சயம் என்று சிலாகிக்கின்றனர் பக்தர்கள்.

ஓங்கி உயர்ந்த மலையின் அடிவாரத்தில் அமைந்து உள்ளது ஸ்ரீகோவிந்தராஜ சுவாமியின் சந்நிதி. இவரை வணங்கி விட்டு, மலையேற வேண்டியதுதான்! முன்பெல்லாம் மலையை நடந்துதான் அடையவேண்டும். இப்போது பக்தர்களின் வருகை அதிகரிக்கவே, மலையில் பாதையிட்டு, கார் முதலான வாகனங்கள் வந்துசெல்லவும் வழிவகைகள் செய்யப்பட்டு விட்டன. மலையேறி வந்து மலையப்பனைத் தரிசித்தால், நம் வாழ்க்கைக்கும் சந்ததிக்கும் பாதை அமைத்துக்



e-magazine
aanmeegamalar.com



கொடுத்தருள்வார் பிரசன்ன வேங்கடாசலபதி.

பூமி மட்டத்தில் இருந்து சுமார் 1,000 அடி உயரத்தில் இருக்கிறது ஆலயம். படிக்கட்டுகள் வழியாகவும் செல்லலாம். சுமார் 1,500 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டு உள்ளன. வாகனப் பாதையும் உண்டு. வழியே சிறுசிறு குன்றுகளாக இருப்பதையும் பார்க்கலாம். இந்தக் குன்றுகள் மொத்தம் ஏழு. அதாவது ஏழு மலைகளைக் கடந்த பிறகு, ஏழுமலையானின் சிலிர்க்க வைக்கும் தரிசனம்!

திருப்பதி பெருமாள் இங்கே பிரசன்னமானார் என்கிறது ஸ்தல புராணம். ஸ்ரீஅலர்மேல் மங்கை சமேதராக ஸ்ரீகோவிந்தராஜ சுவாமி காட்சி தருகிறார். திருப்பதி போலவே ஏழு மலைகள் இருக்கின்றன. திருப்பதிக்கு அருகில் நாகலாபுரம் எனும் ஊர் இருப்பது போல், இங்கே பெருமாள் மலை கிராமத்துக்கு அருகிலும் நாகலாபுரம் அமைந்து உள்ளது. ஆகவே திருப்பதிக்கு நிகரான க்ஷேத்திரம் என்றும் தென் திருப்பதி என்றும் போற்றுகிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்!

புராணத் தொடர்பு கொண்ட ஆலயம். அதேசமயம் புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்க திருத்தலமும் கூட! கல்லணையைக் கட்டிய கரிகாற் சோழப் பெருவளத்தானின் பேரன், தன் ஆட்சியில் கட்டிய கோயில் என்கிறது ஸ்தல வரலாறு. தன் ராஜகுருவின் அருளாசிப்படி, சோழ தேசத்துக்கு உட்பட்ட இந்தப் பகுதியில், வேங்கடவனை நினைத்து, தவமிருந்தான் மன்னன். ஓர் இலந்தை மரத்தடியில் அமர்ந்து தவம் செய்ய... அதில் மகிழ்ந்த பெருமாள், மன்னனுக்குத் திருக்காட்சி தந்ததாகச் சொல்கிறது ஸ்தல வரலாறு. இப்படி, பக்தனின் முன்னே பிரசன்னமானதால், ஸ்ரீசக்ராயுதபாணியாக, திருமணக் கோலத்திலும் திருக்காட்சி தந்ததால், இந்தத் தலத்துப் பெருமாளுக்கு ஸ்ரீபிரசன்ன வேங்கடாசலபதி என்றே திருநாமம் அமைந்தது என்பர்.

ஆகவே, இந்தத் தலத்துக்கு எந்தக் குறையுடன் மனக்கிலேசத்துடன் மவந்தாலும், வந்து பெருமாளை சேவித்தாலும் திரும்பும் போது, அந்தக் குறைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்துவிடுவார் பெருமாள் என்று போற்றுகின்றனர் பக்தர்கள்! திருமணக் கோலத்தில் காட்சி தந்தவர் என்பதால், இவரை வணங்கினால், தடைப்பட்ட திருமணம் விரைவில் நடந்தேறும். எனவே இவரை கல்யாண பிரசன்ன வேங்கடாசலபதி என்றும் அழைக்கின்றனர் பலன் பெற்ற பக்தர்கள்!

எல்லாப் பெருமாள் கோயிலையும் போல, இங்கேயும் துளசியும் தீர்த்தமும் பிரசாதமாகத் தருவது உண்டு. அதேசமயம், தேங்காய்த் துருவல் பிரசாதமும் வழங்கப்படுகிறது இங்கே! அதேபோல், தனிச்சந்நிதியில் இருந்து அருள்பாலிக்கும் தாயாரின் சந்நிதியில் வழங்கப்படும் குங்குமப் பிரசாதம், ரொம்பவே சக்தி வாய்ந்தது என்று கொண்டாடுகிறார்கள் பெண்கள்!

இதுமட்டுமா? இங்கு உள்ள க்ஷேத்திரபாலகர் விசேஷமானவர். இவரிடம் வைக்கும் பிரார்த்தனையும் ஏராளம். நேர்த்திக்கடனும் தாராளம். இங்கே... இன்னொரு சிறப்பு... பக்தர்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கும் பெருமாள் கோயில் இது என்கிறார் சந்தானம் பட்டாச்சார்யர்.

பெருமாள் மலை பெருமாளை, தொடர்ந்து ஒன்பது சனிக்கிழமைகள் வந்து அர்ச்சனை செய்து பிரார்த்தித்தால், நினைத்த காரியங்களும் தடைப்பட்ட காரியங்களும் இனிய மங்கல காரியங்களும் நடத்தித் தந்தருள்வார் பெருமாள் என்பது ஐதீகம்!

ஸ்ரீபத்மாவதித் தாயார் தனிச்சந்நிதியில் அருளாட்சி நடத்துகிறார். சங்கடங்களையெல்லாம் தீர்த்து வைக்கிறார் சக்கரத்தாழ்வார். இங்கே உள்ள தசாவதார சப்த மண்டபம் சிற்ப

e-magazine
aanmeegamalar.com





நுட்பத்துடன், அழகு மிளிரக் காட்சி தருகிறது. ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு அவதாரப் பெருமாள் திருக்காட்சி தருவது சிறப்பு.

எந்தத் தலத்திலும் இல்லாத வகையில், இங்கு விஷ்வக் சேனர் சந்நிதி கொண்டு அருள்பாலிக்கிறார். முக்கியமாக, நரசிம் மரின் திருக் கோலம் நம்மை வியக்கச் செய்யும். நரசிம்மரின் திருமுகமும் நகங்களும் 16 திருக்கரங் களும் அப்படியே தத் ரூபமாகக் காட்சி தந்து சிலிர்க்க வைக்கின்றன.





பிரதோஷத்தின் போது, நரசிம்மருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின் றன. அப்போது வழிபட்டால், மரண பயத்தை நீக்கியருள்வார் என்கிறார்கள். அதேபோல், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள், செவ்வாய்க்கிழமைகளில் இங்கு வந்து நரசிம்ம தரிசனம் செய்வதும் தோஷத்தில் இருந்து விலகச் செய்துவிடும். சந்தோஷத்தை மட்டுமே வழங்கும் என்கிறார்கள் பக்தர்கள்.

புரட்டாசி மாதத்தில் இந்த பெருமாளை வணங்க மிகப் பெரிய பக்தர்கள் பட்டாளம் திரள்வதாலும், அதுவும் புரட்டாசி சனிக்கிழமைகளில் இத்திருக்கோவிலுக்கு பக்தர் களின் கூட்டம் திருவிழாவைப் போன்று குவிவதும் வழக்கமாக உள்ளது.

மேலும் பெருமாள் மலை கிரிவல க்ஷேத்திரம் என்று போற்றப்படுகிறது. பௌர்ணமி தோறும் இங்கு வந்து, கிரிவலம் வந்து, பெருமாளை தரிசித்தால், திருவருளைப் பெறலாம் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
FREE
170 e-books
1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com